# மண்

இதழ் 215

ஜேர்மனி / 2022

புரட்டாதி - ஐப்பசி / Sep - Oct



Elizabeth II / Queen of the United Kingdom

(21 April 1926 - 08 September 2022)

70 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த பிரித்தானிய எலிசபெத் மகாராணி

(1952 - 2022)










யேர்மனியில் வாழ்பவர்களான திரு சிவஞானம் ஏகானந்தராசா மற்றும் வைரமுத்து சிவராசா ஆகியோரின பிறந்தநாளையொட்டி அவர்களின் நிதிப் பங்களிப்பில் மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லத்தில் வாழும் சிறுவர்களுக்கு உணவு வழங்கல் 31.07.2022 மற்றும் 31.08.2022. அனுசரணை மண் சஞ்சிகை- யேர்மனி

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

| | |
|---|---|
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| தொலைபேசி: | 0203/8073898<br><br>015254799233 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |

## ஆசிரியர் பக்கம்...

உலகிற்கு முன்னெச்சரிக்கையாகும் இலங்கை சிறுவர்களின் நிலை

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் சிக்கலுக்குள்ளாகும் நிலையில், வறிய மற்றும் மிகவும் பாதிப்புக்குள்ளான சிறுவர்கள் அதன் தாக்கத்தை எதிர்நோக்குகின்றனர்.

இலங்கை சுற்றுலாத்துறைக்காக பெயர் போன நாடாக விளங்கி வந்தபோதிலும், தற்போது மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது.

நாட்டின் மத்திய மலைநாடு, பெருந்தோட்டப் பகுதி, வன்னி நிலப்பரப்பு, கிழக்கு மாகாணம் உள்ளிட்ட பின்தங்கிய பல பகுதிகளில் வசிக்கும் குடும்பங்கள் அத்தியாவசிய உணவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் தமது வழக்கமான மூன்று வேளை உணவைத் தவிர்த்து வருவதாக யுனிசெப் மற்றும் சேவ்த சில்ரன் போன்ற அமைப்புக்களின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு வறுமையின் பிடியில் சிக்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் பட்டினியுடன் தூக்கத்திற்குச் செல்கின்றனர். கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டின் தாக்கத்தால் தெற்காசியாவில் இரண்டாவது உயர் விகிதத்தைக் கொண்டுள்ள இலங்கையில் இவ்வாறு தேவையுடையவர்களுக்கு அடுத்த வேளை உணவு கிடைக்கும் என்பதில் உறுதியில்லாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை, இலங்கையில் சுமார் இரண்டில் ஒரு சிறுவருக்கு ஏதாவது ஒரு விதத்தில் அவசர கால உதவித் தேவை காணப்படுவதாக பல ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. கொரோனா தொற்றால் கடந்த இரண்டு வருடங்கள் தடைப்பட்ட கற்றல் நடவடிக்கையினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள 4.8 மில்லியன் சிறுவர்களின் கல்வியானது பாடசாலை வருகை தொடர்ந்தும் குறைவாக இருப்பதால் மேலும் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்தில் காணப்படுகின்றது.

சிறுவர்களின் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் தற்போதுள்ள நெருக்கடியினால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடிகள் தோற்றம் பெறுவதற்கு முன் சிறுவர்களுக்கிடைத்த ஆரோக்கியமான மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவுகள் அவர்களுக்கு தற்போது கிடைப்பதில்லை. அத்துடன் அவர்களுக்குத் தேவையான அடிப்படையான கற்றல் உபகரணங்கள் கூட அவர்களிடம் இல்லை. இவ்வாறிருக்க பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தற்போது போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில், நாட்டில் உயர்ந்து செல்லும் பொருளாதார அழுத்தம் காரணமாக சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பு தொடர்பான அதிக அறிக்கைகள் வெளியாகியுள்ளன. நாட்டில், ஏற்கனவே 10,000 த்திற்கும் அதிகமான சிறுவர்கள் நிறுவனம் சார் கட்டமைப்பின் பராமரிப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதற்கான பிரதான காரணமாக வறுமை நிலை காணப்படுகின்றது.

முன்பள்ளி சிறுவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் தாய்ப்பாலூட்டுபவர்களுக்கு மிக அவசியமான நிதி உதவிகளையும் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வழங்கி வந்தாலும் நெருக்கடி தொடர்வதனால் மேலும் தேவைகள் அதிகரித்துள்ளன.

அனைத்து வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த சிறுமியர் மற்றும் சிறுவர்களுக்கான தொடர்ச்சியான கல்வி உறுதி செய்யப்படல் வேண்டும். அப்போது அவர்கள் தமது எதிர்காலத்திற்காக தயாராக முடியும் என்பதுடன் சிறுவர் தொழிலாளர், சிறுவர்கள் மீதான சுரண்டால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஆபத்திலிருந்து தம்மை காத்துக்கொள்ள முடியும்.

உயிர் ஆபத்துள்ள நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிராக பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கு மத்திய மற்றும் சமுதாயம்சார் சுகாதார சேவைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும்.

உலகின் ஐந்தில் ஒரு பகுதியினராக கருதப்படும் வறுமை நிலையில் வாழும் குடும்பங்களில் சிறுவர்களின் சுகாதாரம், கற்றல் மற்றும் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

உலகப் பொருளாதார வீழ்ச்சியின் மோசமான விளைவுகளுக்கு எதிராக சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு நாம் இப்போது செயல்படவில்லையென்றால், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட பிராந்தியத்தின் சிறுவர்கள் மேலும் வறுமைக்குள் தள்ளப்படுவார்கள். அத்துடன் அவர்களின் உடல்நலம், ஊட்டச்சத்து, கற்றல் மற்றும் பாதுகாப்பு என்பன மேலும் பாதிப்புக்கு உள்ளாகும்.

தமது பொறுப்பில்லாத நெருக்கடியின் விளைவுகளை சிறுவர்கள் அனுபவிப்பதற்கு நாம் அனுமதிக்க முடியாது. அவர்களது எதிர்காலத்தை காப்பதற்கு நாம் இன்றே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**~ஆசிரியர்~ 15.09.2022**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### ஙப் போல் வளை:-

ஔவைப் பாட்டி உங்களுக்குத் தமிழ் எழுத்து ஒன்றையே உதாரணம்காட்டி அதுபோல நீங்களும் வாழவேண்டும் என்று கூறுகின்றார். தமிழ்க் குழந்தைகளாகிய நீங்கள் தமிழ் எழுத்தாகவே வாழும்படி கூறுகின்றார்." ங" என்ற எழுத்தை நீங்கள் அறிவீர்கள். சொற்களில் இந்த எழுத்தை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை . அங்கனம், இங்கனம் என்று அபூர்வமாகவரும். ஙா, ஙி, ஙீ போன்ற எழுத்துக்கள் சொற்களில் வருவதில்லை. ஆனாலும் ங என்னும் எழுத்து தன் வரிசையிலுள்ள மற்ற எழுத்துக்களைத் தழுவிக்கொண்டிருக்கின்றது. அதே மாதிரி நீயும் பயன் உள்ளவனாக இருக்க வேண்டும். உன் இனத்தவர் பயனில்லாதவர்களாக இருந்த போதிலும் அவர்களை நீ தழுவிக்கொள்ள வேண்டும். "ங" வைப்போல என்கிறார் ஔவைப்பாட்டி.

### சனி நீராடு:-

அறிவுக்கு மட்டுமா விருந்து வழங்குகிறார் ஔவையார்.?.. உடல் ஆரோக்கியத்துக்குமே வழிவகுத்துக் கொடுக்கிறார். எப்படி?.. நம் தமிழ்நாடு வெப்பம் மிகுந்தநாடு. வெப்பம் தணிய எண்ணெய் தேய்த்துக் தலைமுழுகவேண்டும். இப்படி நீராடினால் உடம்பு குளிர்ச்சியடையும். வாரத்துக்கு ஒருமுறை எண்ணெய்க் குளியல் அவசியம் என்கிறார் ஔவையார். அதுவும் என்றைக்கு?... சனிக்கிழமையன்று. வெள்ளிக்கிழமையை மங்களகரமாகத் திகழவேண்டிய பெண்களுக்குக் குளியல் நாளாக ஒதுக்கியிருக்கிறார்கள் நம் பெரியோர்கள். ஆண்களின் உடல் ஆரோக்கியத்திற்கு சனிக்கிழமையை ஒதுக்குகிறார் ஔவையார். ஆகவே நீ தவறாமல் சனிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு தலைமுழுக வேண்டும்.

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## விழிப்பாயிரு... செழிப்பாயிருப்பாய்...

அநாகரீகமான அதிக பேச்சைவிட சிந்தனை நிறைந்த சிறிய பேச்சு சிறப்பு.
ஆழமான தத்துவங்களும், அதிக அர்த்தங்களும் அடங்கியதே வாழ்க்கை.
இருவரில் ஒருவராவது கோபத்தை தடுத்துத் தணித்தால், தகுந்த சமாதானம் கிட்டும்.
ஈர்க்கப்படும் வேண்டாத தவறுகளால் இளம் சமுதாயம் தம்மை இழக்கிறது.
உண்மை நிலைமைகளை உணர்ந்து கொடுக்கும்போது உயர்ந்த மனிதனாகிறாய்.
ஊதியம் உயர்த்துவதற்கு உறுதுணை, உயர்ந்தோர் நட்பை தேடுவதேயாகும்.
எந்தக் கஷ்டத்திலும் நீதியைத் தழுவிக்கொள், உனக்குள் நின்மதி தளைக்கும்.
ஏமாற்றங்களை எதிர்கொள்ளும் வெற்றி மனப்பான்மை, எம்மை உயர்த்தும்.
ஜனனத்திற்கும் மரணத்திற்கும் இடைப்பட்ட காலம், இறைவனால் இயக்கப்படுகிறது.
ஒழுக்கமான பாதையில் சென்று, ஒரு ஒழுங்கு சீரான வாழ்வைப் பெறுங்கள்.
ஓர் உயிரில் இன்னொரு உயிர் அன்பு செலுத்தும்போது, கருத்தொருமித்த காதலாகிறது.
நெருக்கடியில் நொருங்காமல் நிலை தடுமாறாமல் நில்.
பழிப்பதும் பழிவாங்குவதும், புதைகுழியில் புதையும்.
மனித மனம் மாசுபடும்போது, மகிழ்ச்சி மாயமாக மறைகிறது.
மனிதனை வெல்பவனை விட, மனத்தை வெல்பவன் மகா வல்லவன்.
விபரீதமான விதண்டா வாதத்தால் வரக்கூடாத வேதனைகள் வரும்.
அறிவிருந்தும் அதைப் பாவியாமல், அழிப்பதும், அழிவதும், அர்த்தமற்றது.
தடுமாற்றமான பேச்சுக்கள் தலைவர்கள் மத்தியில் தலைக்குனிவைத் தரும்.
பேசுவது பெரிதல்ல பிரச்சனைகளை பெரிதாக்குவதே மிகப்பெரிய தவறு.
பிரச்சனை இல்லாமல் சமூகம் இல்லை, தீர்க்கப்படாமல் வாழ்ந்தவர்களும் இல்லை.
பிரச்சனைகளைக் கண்டு பயப்படாதே, பயந்தால் அது உன்னை பிசைந்தெடுக்கும்.
சிறிய பிரச்சனையானாலும், தீர்ப்பதில் தீவிர கவனம் செலுத்து, சீக்கிரம் தீரும்.
நாம் செல்ல வேண்டிய பாதையை நாம் தான் சரிவர செப்பனிட வேண்டும்.
புரியவேண்டியதை புரிந்து கொண்டால் மட்டுமே புகலிடம் புனிதமாகிறது.
நாளும்பொழுதும் நிகழும் நன்மை தீமைகள், எமது நடைமுறைகளால் நுழைகிறது.
நீங்கள் படுக்கையை விட்டு எழும்பும்போது, புத்தம்புதிய நாள் பூத்து மலர்கிறது.
உங்களுக்கு அன்பு, பரிவு, புரிந்துணர்வு, கொண்ட மனம் கொடுக்கப்பட்டுள்ளது.

# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



## சோதிடனைக் கொன்ற கதை

ஒரு சமயம் பீஜப்பூர் சுல்தான் கிருஷ்ண தேவ ராயரின் படை வலிமையைப் பற்றிக் கேள்விப்பட்டான். ராயர் சுல்தானுடன் போர் தொடுக்க எண்ணியுள்ளதையும் அறிந்து கொண்டான்.இதை எப்படியேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்டான். அதனால் ஒரு சூழ்ச்சி செய்தான்.அரசர் ஜோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர் என்பதை அறிந்து கொண்டான். ரகசியமாக அரண்மனை ஜோதிடரை சந்தித்தான் சுல்தான்.நிறைய பொன்னைக் கொடுத்து ராயரின் படையெடுப்பை எப்படியாவது தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொண்டான்.

பொன்னுக்கு ஆசைப்பட்ட அந்த வஞ்சக ஜோதிடன் நேராக விஜயநகர அரண்மனைக்கு வந்தான்.கிருஷ்ணதேவ ராயர் படையெடுக்கத் தயாராக உள்ளதை அறிந்துகொண்டான். அவன் உள்ளம் வேகமாக வேலை செய்தது. மன்னர் முன் சென்று நின்றான்.மிகவும் தயங்குவது போல் பாசாங்கு செய்தவன் அரசே! தற்போது தாங்கள் படையெடுப்பது சரியல்ல.ஏனெனில் தங்களின் கிரகநிலை தற்போது சரியில்லை.எனவே படையெடுப்பில் தற்போது இறங்க வேண்டாம். என்று கூறினான்.

மந்திரி பிரதானிகளும் அதையே கூறினர். அவர்களும் மன்னரின் உயிரைப் பெரிதென மதித்தனர்.அரசியரும் மன்னரையுத்தத்திற்குப் போகவேண்டாம் எனத் தடுத்தனர். அரசரும் யோசித்தார்.தெனாலிராமன் இவற்றையெல்லாம் கவனித்தவண்ணம் இருந்தான்.அவனுக்கு ஜோதிடன் மேல் சந்தேகம் ஏற்பட்டது.எனவே மன்னனிடம் அரசே! நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? சோதிடன் சொன்ன பலன்கள் எல்லாம் நடந்து விடுகின்றனவா என்ன? என்று தைரியம் சொன்னான்.

தேவராயரும் அதை ஆமோதித்தார் .ராமா! நீ சொல்வதும் சரிதான். ஆனால் இதை எப்படி மற்றவர்களுக்கு நிரூபிப்பது?சோதிடம் பொய் என்று நிரூபிப்பவருக்குபத்தாயிரம் பொன் பரிசு என்று அறிவியுங்கள் என்றும் ஆணையிட்டார்.தெனாலிராமனுக்கு மிக்க மகிழ்ச்சி. அரசே! நானே இதை நிரூபிக்கிறேன். ஆனால் அந்த சோதிடனுக்குத் தண்டனை தருகின்ற உரிமையையும் எனக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். மன்னரும் இதை ஒப்புக்கொண்டார்.

மறுநாள் சபா மண்டபத்தில் சோதிடனும் தெனாலிராமனும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர். ராமன் சோதிடரைக் கூர்ந்து கவனித்தான்.அவர் மேல் அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவன், சோதிடரே! நீர் கூறும் சோதிடம் தவறாமல் பலிக்குமல்லவா? என்றான் மெதுவாக.அதிலென்ன சந்தேகம்? நான் சொன்னால் அது கண்டிப்பாக நடந்தேறும்.தன் கரங்களைக் குவித்தபடியே "நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து பலன்களைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்" என்றான் ராமன் பணிவாக.சோதிடனும் கர்வத்துடன் தலையை அசைத்துக் கொண்டான்.

"அப்படியானால் தங்களின் ஆயுள் காலத்தையும் தாங்கள் அறிவீர்கள் அல்லவா?" ஓ! நான் இன்னும் நாற்பது ஆண்டுகள் உயிர் வாழ்வேன். இது சத்தியம். சோதிடன் பெருமையுடன் கூறினான். உமது வாக்கு இப்போதே பொய்த்து விட்டதே! என்றவாறே அருகே நின்ற சேனாதிபதியின் வாளை உருவி அந்த வஞ்சக சோதிடனின் தலையை வெட்டினான் ராமன்.

அனைவரின் திகைப்பையும் நீக்கிய ராமன் அந்த சோதிடனின் சுவடிக்கட்டை பிரித்துக் காட்டினான். அதனுள் பிஜாபூர் சுல்தான் சோதிடனுக்கு அனுப்பிய கடிதங்கள் இருக்கக் கண்டான். அந்த சோதிடன் பீஜப்பூர் சுல்தானின் கைக்கூலி என்று அறிந்து அவனுக்குத் தண்டனை அளித்ததற்காக ராமனைப் பாராட்டினார். தன் வாக்குப் படியே பத்தாயிரம் பொற்காசுகளையும் அளித்து மகிழ்ந்தார். அதன்பின் தன் எண்ணப்படியே பீஜபூரையும் குர்ப்பாகானையும் வெற்றி கொண்டார் கிருஷ்ணதேவராயர்.

..........................................................................................................................................

## பொன்மொழி...

நோய் வந்தபின் மனிதன் தன் உயிரை நினைக்கிறான்
சுகமானபோது அவன் பணத்தை நினைக்கிறான்...

# முயற்சி திருவினையாக்கும்...

ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின் விளக்குகள் எரிகின்றன. சில நூற்றாண்டுகளுக்கு முன் இந்த மின்விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமாஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின் விளக்குகளைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தமது ஆய்வைத் தொடர்ந்தார்.

பல முறை தோல்விகளைக்கண்ட அவர் இறுதியிலே தம் ஆராச்சியிலே வெற்றி கண்டார். மின் விளக்கு எரியத் தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். இன்றும் நம் வீடுகளிலே மின் விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமாஸ் அல்வா எடிசன் ஆவார்.

**செல்வி வி அர்சனா - வகுப்பு -10**
**"அருளகம்" சிறுவர் இல்லம்**
**வவுனியா.**

# பல பொருள் தரும் ஒரு சொல்...

1-அன்பு - நேசம், பரிவு, இரக்கம், பிரியம்.
2-அழகு - வனப்பு, எழில், வடிவு, கோலம், நிறம், வண்ணம்.
3-அறிவுரை - புத்திமதி, நல்லுரை, உபதேசம்.
4-ஆதி - முதல், ஆரம்பம், தொடக்கம்.
5-உண்மை - மெய், சத்தியம், வாய்மை.
6-உடல் - சரீரம், உடம்பு, மெய், மேனி.
7-உதிரம் - செந்நீர், குருதி, இரத்தம்.
8-ஒலி - ஓசை, அரவம், தொனி, சத்தம்.
9-ஒளி - வெளிச்சம், சுடர், கதிர், பிரகாசம்.
10-காற்று - வளி, மாருதம், தென்றல், பவனம்.
11-கல்வி - கலை, வித்தை, படிப்பு.
12-நீதி - தர்மம், நடு, நியாயம், நெறி.
13-பூமி - உலகம், புவி, பார், வையகம், அகிலம், தரணி.
14-வானம் - ஆகாயம், விசும்பு, விண், அண்டம், விண்ணகம்.
15-வயல் - பழனம், செய், களனி, புவனம்.

**செல்வி சாமினா சிவதாசன்**
**எசன் - யேர்மனி**

# தன்னை உணர்ந்த ராஜா..

அழகான தேசத்தில் மக்களும் மன்னரும் சந்தோசமாக வாழ்ந்து வந்தனர். அப்படி இருக்கும் போது அந்நாட்டிலுள்ள மக்கள் மன்னர் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவதில்லை. இதனால் அந்நாட்டு மன்னர் கவலையுற்றார். ஒரு நாள் மன்னர் மந்திரவாதி ஒருவரை அழைத்துத் தன்னுடைய பிரச்சனைகளைக் கூறுகின்றார். அந்த மந்திரவாதி ராஜாவினுடைய பிரச்சனைகளைக் கேட்டுச் சரி நான் என்னுடை மந்திர வித்தையைப் பயன் படுத்தி அவர்களது மனதை மாற்றுகிறேன் என்றார். சரி என்று ராசாவும் அந்த மந்திரவாதியை அனுப்புகிறார்.

மக்களுக்கு அவர் பல அறிவுரைகள் சொல்லியும் அவர்கள் அதைக் கேட்கவில்லை. இதைச் சொன்னால் ராஜாவின் மனம் கஸ்டப்படும் என்று எண்ணி மந்திரவாதி அதைச் சொல்லவில்லை. மந்திரவாதி ராஜாவிடம் சென்று உங்களுடைய கட்டளைகளை மக்கள் பின்பற்றுவார்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

பிறகொருநாள் ஒருவர் வந்து ராஜாவிடம் எனக்கொரு சந்தர்ப்பம் தந்தால் நான் உங்கள் நாட்டு மக்களை உங்களின் கட்டளைக்கேற்ப பின்பற்றச் செய்வேன் என்று கூறினார். ராஜாவும் மிக்க மகிழ்ச்சியோடு சரி நான் உனக்குச் சந்தர்ப்பம் தருகிறேன். எந்நாட்டு மக்கள் என் கட்டளைகளைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்று கூறினார். அவரும் சரி என்று கூறினார். அவர் தனக்கு இரண்டு ஓலைச்சுவடிகளை தரும்படி கேட்டார். ராஜாவும் சரி என்று இரண்டு ஓலைச் சுவடிகளை அவரிடம் கொடுத்தார். அவர் அதில் சில சொற்களை எழுதினார். அந்த ஓலைச் சுவடியை ராஜாவிடம் கொடுத்து நீங்கள் இதிலுள்ள சொற்களைப் பயன்படுத்தினால் நீங்கள் சொல்லும் கட்டளைகளை மக்கள் நிறைவேற்றுவார்கள் என்று சொன்னார். ராஜாவும் அவருக்கு நன்றி கூறி பரிசில்கள் கொடுத்து அனுப்பினார்.

மறுநாள் ராஜா உணவிற்காகச் சேவகனை அழைத்தார். அப்போது ஓலைச் சுவடியில் இருந்த சொல் ஒன்றைப் பாவித்தார். அந்தச் சேவகன் சிரித்த முகத்துடன் உணவை எடுத்து வந்தான். அவன் அதை எடுத்து வந்தவுடன் ராஜா மறுபடியும் ஓலைச்சுவடியில் இருந்த இன்னொரு சொல்லைப் பாவித்தார். அந்தச் சேவகன் மிக்க மகிழ்ச்சியுடன் வீடு சென்றான். ராஜா பாவித்த முதலாவது சொல் "தயவுசெய்து" இரண்டாவதாகப் பயன்படுத்திய சொல் "நன்றி"

இதன் பிறகுதான் ராஜா தன்னை உணர்ந்து கொண்டார். தான் மக்களிடம் அன்பாக நடக்கவில்லை என்றும் இதனால்தான் மக்கள் தான் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவதில்லை என்பதனையும் உணர்ந்தார். அன்றிலிருந்து ராஜா மக்களோடு அன்பாக நடந்துகொண்டார். மக்களும் அரசனிக் கட்டளைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்தனர்.

**செல்வி இ காயத்திரி**
**இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம்**
**வவுனியா**

.........................................................................................................................................

# தமிழ் ஒரு பண்பாடு

மனிதன் எப்போதும் சமூகமாகக் கூடி வாழ்வதை விரும்புவான். அவன் ஒரு சமூகப் பிராணி. அவனால் சமூகத்தைவிட்டுப் பிரிந்துவாழ முடியாது. அவனது வாழ்வியல் நோக்கிற்கு அது ஏற்புடையது அல்ல. எனவேதான் மனிதன் சமூகமாக வாழப் பெரிதும் விரும்புகின்றான். அவன் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கமைய தன் வாழ்வை அமைத்துக் கொள்கிறான். அவன் ஒரு சமூகமாக வாழ்வதால் அவனுக்கெ ஒரு பண்பாடு உருப்பெற்று விடுகின்றது. ஒரு கூட்டமாக வாழ்ந்த மனிதன் தனக்கெனச் சில ஒழுங்கு நெறிகளையும் ஒழுங்கு விதிமுறைகளையும் தோற்றுவித்து அவற்றைக் காலம் காலமாக பின்பற்றி வந்தபோது ஒரு பண்பாடு உருவாகியது. இவ்வாறு ஒரு சமூகத்தில் இனக்குழுமங்களின் வேறுபாட்டிற்கேற்ப பண்பாடும் வேறுபாடும் இவ்வாறு வேறுபடும்போது இன்றியமையாதாகும்.

இந்த வகையில் தமிழ்மொழியும் பண்பாடு மொழியாகவே விளங்குகின்றது.. பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் மொழியானது பல்வேறு சமூக, சமயத்தவர்களின் மொழியாக இருந்து வருவதை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் சைவ, வைஸ்ணவ சமயத்தவர்கள் தமது பண்பாடு வெளிப்பாட்டில் தமிழ் மொழியைப் பயன்படுத்தி வந்தனர். பின்னர் சமண, பௌத்த மதங்களின் வெளிப்பாட்டிற்கு தமிழ்மொழி இன்றியமையாததாக அமைந்தது.

பின்னர் இஸ்லாமிய, கிறிஸ்த்தவங்களும் தத்தமது மதப் பயன்பாடுகளுக்கு தமிழ் மொழியைப் பயன்படுத்தி வந்தனர். தமிழ் பன்முகப்பட்டு வளர்ந்தமையை அவதானிக்கலாம். எனவே பண்டைக்காலம் முதல் தற்காலம் பல்வேறு சமய பண்பாடுகளின் வளர்ச்சியில் தமிழ்மொழி முக்கிய பங்காற்றியமையால் பண்பாடு பல்பண்பாடு மொழியாக விளங்குவதை அவதானிக்கலாம். இத்தகைய சமயத்தவர்களின் பண்பாடு பின்புலத்தை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் பல தமிழ்மொழி மூலம் தோற்றம் பெற்றிருக்கின்றமை இதற்கு அரண் சேர்ப்பதாகவே அமைகின்றது.

இதற்குத் தமிழ் மொழியானது எனது நாட்டின் மொழியாக மட்டுமன்றி பல்வேறு நாட்டவரின் மொழியாகவும் இருப்பதனால் அவ்வவ் நாடுகளின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் தன்மை தமிழ் மொழிக்கே உண்டு. இதனால் தமிழ் ஒரு பண்பாட்டு மொழி என்று கூறுவதில் ஐயமில்லை இந்தியாவின் தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் இம்மொழியின் பயன்பாடு கணிசமான அளவு இடம்பெறுவதில் அவ்வவ் நாட்டுப் பண்பாட்டு அடையாளங்களை தமிழில் வெளிப்படுத்தும் தன்மையுண்டு. இதனால் பல நாட்டுப் பண்பாடு பெறுமானங்களின் வெளிப்பாட்டிற்கு தமிழ் மொழி ஊன்றுகோலாக அமைவதனால் தமிழ் ஒரு பண்பாட்டு மொழியாக விளங்குகின்றது.

தமிழ் மொழியானது கடந்த பல வருடங்களாக ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், யேர்மனி, பிரித்தானியா, சுவீஸ்லாந்து, டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து, இத்தாலி மற்றும் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பிறநாட்டுப் பண்பாட்டுப் பெறுமானங்கள் இம் மொழி வாயிலாக வெளிப்படுத்தப்படுவதால் தமிழ் மொழியானது ஒரு பண் பண்பாட்டு மொழியாக விளங்குகின்றது.

**செல்வி க சாருகா - வகுப்பு 11**
**"அருளகம்" சிறுவர் இல்லம் - வவுனியா.**

## அப்பா!...

இடர்வரும்போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் - மாந்தர்
உறவு கொள்வர் அப்பா...

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ - அப்பா...

நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!..

**செல்வி கி நிதுர்'ா-வகுப்பு 11**

## எதற்கு?...

இரவும் பகலும் எதற்கு-மனம்
இன்பம் துன்பம் உணர
மேடு பள்ளம் எதற்கு - திறன்
மேன்மை தாழ்மை உணர!..
காயும் கனியும் எதற்கு - சொல்
கடுமை இனிமை உணர!..
வெயிலும் மழையும் எதற்கு-உள்ளக்
கடுமை அன்பு உணர!..
பூவும் பிஞ்சும் எதற்கு - நறும்
புதுமை இளமை உணர
பிறப்பு இறப்பு எதற்கு?..-உலகில்
ஆக்கம் அழிவு உணர!..
வரவும் செலவும் எதற்கு?..
நடுவு நிலைமை உணர!..
மண்ணும் விண்ணும்எதற்கு-வாழ்வான்
மறுமை இம்மை உணர!..

**செல்வி பா தமிழ்ச்செல்வி-வகுப்பு 10**

**"அருளகம்" சிறுவர் இல்லம் - வவுனியா**

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 33

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 126
### (புரட்டாதி - ஐப்பசி - 2022)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 உலகில் வாழும் இனத்தவர்களில் ஒரு இனம்.

13-14 நம் நாட்டில் பலர் இதில்தான் படுத்து உறங்குவார்கள்.

வ-இ

08-05 பணக்காரர்களை இப்படியும் அழைப்பர்.

16-15 தச்சுவேலை செய்பவர்கள் பாவிக்கும் ஆயுதங்களில் ஒன்று.

கீ-மே

13-05 சிலர் இதன் ரசனையால் மயங்கிவிடுவர்.

16-04 இவர்கள் இல்லையேல் நாம் சோறு உண்ண முடியாது.

மே-கீ

02-14 காரமான உணவுப்பொருள்.

11-15 வீட்டுப் பாவனைப்பொருள் ஒன்று.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள்

## கற்றுக்கொள்!..

பூக்களிடம் கற்றுக்கொள்
புன்னகை புரிவாய்!..
மரங்களிடம் கற்றுக்கொள்
வள்ளலாய் வளர்வாய்!..

பறவையிடம் கற்றுக்கொள்
உறவை இணைப்பாய்!..
விலங்கிடம் கற்றுக்கொள்
வீரமாய் நடப்பாய்!..

நதியிடம் கற்றுக்கொள்
நன்மைகள் செய்வாய்
மலையிடம் கற்றுக்கொள்
மாண்புடன் இருப்பாய்!..

கடலிடம் கற்றுக்கொள்
ஞானத்தைப் பெறுவாய்
காற்றிடம் கற்றுக்கொள்
காலத்தை வெல்வாய்!..

விண்ணிடம் கற்றுக்கொள்
விஞ்ஞானி ஆவாய்
மண்ணிடம் கற்றுக்கொள்
வாழ்வியல் தெளிவாய்!..

மனிதனிடம் கற்றுக்கொள்
மானிடன் ஆவாய்
மனிதத்தைக் கற்றுக்கொள்
நேயத்துடன் வாழ்வாய்!...

**செல்வி ரா கீர்த்தனா - வகுப்பு 10**
**"அருளகம்" சிறுவர் இல்லம்**
**வவுனியா**

## போற போக்கில் பொருளாதாரம்!..

அழிவு வரும் என அறிந்தும்
அழகை நாடுகின்றோம்
ஆழம் உண்டென ஆராய்ந்தும்
ஆசையை நாடுகின்றோம்
இருப்பு என்பதை இழந்து
இலங்கையில் வாடுகின்றோம்!..

உண்மைகள் புதைக்கப்பட்டு
உறவுகள் அழிக்கப்பட்டு
ஊனுறக்கம் சிதைக்கப்பட்டு
ஊமைகள்போல் அடிமைப்பட்டு
பொங்கி அழிந்ததே பொருளாதாரம்
பெருமை இழந்தனர் பாமர மக்கள்!..

எல்லாப் பொருட்களும் உச்சிவிலை
எதுவுமில்லா ஏழைகளாய் மக்கள்
ஐஸ்வரியத்துக்கு ஏக்கப்பட்டு
ஐயம் நிறைந்த அவல வாழ்வு
ஒரு பிடி சோற்றுக்கு அடிபட்டு
ஓடி..ஓடி உணவு தேடும் வாழ்வு!..

அரசியலும் அரிசியும் இல்லாமல்
மக்கள் அன்றாடம் நடுத்தெருவில்
அலைகின்றார் பசி பட்டினியுடன்
அணிகள் திரண்டும் போராட்டம்
முடிவில்லாப் பொருளாதாரம்
போற போக்கில் நாடெல்லாம்
சோமாலியாபோல மாறுமா?..

**செல்வி பொ தரணியா -வகுப்பு 10**
**"அருளகம்" சிறுவர் இல்லம்**
**வவுனியா**

# ஏழையின் சிரிப்பில் உயர்பண்பு!...

ஒரு கிராமத்தில் பல ஏழைக்குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அந்த கிராமத்தில் வெயில் என்று கூட பார்க்காமல் விவசாயிகள் நாள் முழுதும் வேலை செய்வார்கள். இன்னும் சிலர் தச்சுவேலையும் செய்வார்கள். இந்த கிராமத்தின் பக்கத்து கிராமத்தில் பல வசதியான வீடுகள் இருந்தன. அவர்கள் ஏழைகளுக்கு இரக்கம் காட்டமாட்டார்கள். இப்படி இருக்கும்போது ஒரு காலகட்டத்தில் அந்த ஏழைக்கிராமத்துக்கு பஞ்சம் ஏற்பட்டது. நெல் எல்லாம் வெட்டுக்கிளிகள் தின்றன.

ஒரு வீட்டிலிருக்கும் ஒரு பிள்ளைக்கு பசி தாங்க முடியாமல் ஒரு பணக்கார பிள்ளையின் வீட்டிற்கு சென்றது எங்களுடைய வீட்டில் சமைப்பதற்கு ஒன்றுமில்லைஉங்கவீட்ட கொஞ்சம் அரிசி இருந்தால் கொடுங்கள் என்று அந்த வீட்டுச்சிறுமி கேட்டது. அதற்கு அந்த சிறுமி சீசீ இங்க இருந்து போ உங்கள மாதிரி ஆட்களுக்கு எங்க அம்மா சொன்னாங்க எதுவும் கொடுக்க கூடாது என்று கூறினாள். அதற்கு அந்த சிறுமி கண்ணீர் விட்டப்படி சென்றாள்.

அப்படியே சில வருடங்கள் சென்றன. ஒரு நாள் அந்த பணக்கார வீட்டுசிறுமி வீட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அவளது அம்மா எங்காவது சென்று உப்பு வேண்டிவா என்று கூறினாள் அதற்கு அந்தச் சிறுமி சரி என்று கூறிவிட்டு சென்றாள். தன்னிடம் அரிசி கேட்டுவந்த சிறுமியின் வீட்டிற்கு சென்றாள். வாசலில் நின்று அக்கா என்று அழைத்தால் அதற்கு அந்த சிறுமி வெளியில் வந்து எட்டிப்பார்த்து யோசித்தாள் எங்கவே பார்த்ததுபோல் இருக்கின்றதே என்று நினைத்து நான் அரிசி கேட்ட சிறுமி என்று நினைத்த பிறகு அந்த சிறுமியை உள்ளே வா என்றாள். அதற்கு அவள் வேண்டாம் என்றாள். சிறுமி அவளை பார்த்து உப்பு வேண்டும் என்றாள் அதற்கு அவள் இதோ கொண்டு வருகின்றேன். என்று கூறி வீட்டிற்குள் சென்று ஒரு பாத்திரத்தில் கொண்டு வந்து அந்த சிறுமியிடம் கொடுத்தாள்.

அதற்கு அந்த சிறுமி நன்றி கூறிவிட்டு சென்றுவிட்டாள் அவள் போகும் போது ஒரு ஒற்றையில் ஏதோ ஒரு விடயம் எழுதி இருந்தது அதை வாசித்தாள் அதில் அனைவருக்கும் ஆபத்தில் உதவ வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அவளிடம் ஓடிப்போய் மன்னிப்பு கேட்டாள். அவளும் பரவாயில்லை என்றால் அன்றிலிருந்து இருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

**செல்வி ச கதிர்விழி - தலைமன்னார்**
**செபமாலை இரக்கத்தின் இல்லம்**

# போதைக்கு அடிமையாகாதே!...... (நாடகம்)

மேரி :- எனங்க நம்மட மகன் புதுசா நிறைய பொடியங்களோட சேர்ந்து கஞ்சா, தூள் எண்டு நிறைய கூடாத பழக்கம் பழகிக்கொண்டிருக்கின்றான்.

ஜெயா :- ஓம், ஓம் நீ வீட்டுக்குள்ள இருக்கிறாய்.. நாலு இடத்துக்குப் போய் வாறன் ஒவ்வொருத்தரா வந்து புகார் சொல்லுறாங்க வெளியில் தலகாட்டவே முடியாம இருக்கு அவன் என்ன இப்படி யோசிக்காம நடக்கிறான் என்றே விளக்கங்கள்..
( கதவு திறந்து சத்தம் கேட்டது இருவரும் பார்கின்றனர். அங்கு றொசான் அழுகையுடன் நிற்கின்றான். அவன் அனுவுடைய அண்ணை பொலிஸ் பிடித்துச்சென்றதை சொல்கின்றான். அப்பொழுது ஜெயா பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிசாரிடம் கதைத்து கூட்டிக்கொண்டு வருகின்றாள். மீண்டும் மீண்டும் அவன் ஒரே அந்த தவறை செய்துக்கொண்டே இருக்கின்றான். ஒரு நாள் மேரி தற்கொலை செய்து கொள்ளுகின்றாள். ஜெயா, றொசான், அஜய் மூவரும் அழுது மாரடிக்கின்றனர் இறுதிகிரிகைகள் அனைத்தும் நிறைவுற்ற பின் வீடு திரும்புகின்றனர்.)

ஜெயா :- பாத்தியாடா அஜய் நீ செய்த வேலையால உங்கம்மா உயிரையே விட்டிட்டா இனி என்னடா செய்யப் போறா என்ற உயிரையும் எடுக்கபோறியா என்ற மூஞ்சையிலை முழிக்காதே!

அஜய் :- ( உண்மையான மனவருந்தத்துடன் அழுதுக்கொண்டே ஜெயாவின் காலில் விழுந்து) அப்பா அப்படிச் சொல்லாதீங்கப்பா நான் என்ன அறியாம செய்திற்றன் இதுக்குப் பிறகு நான் ஒண்டும் செய்யமாட்டன் மன்னிச்சிருங்கப்பா.
(அவரும் மன்னித்து ஏற்றுக்கொண்டார். அன்றிலிருந்து தீயபழக்கத்தை கைவிட்டு தனது அப்பாவுக்கு பிள்ளையாக வாழ ஆரம்பிக்கின்றான். இருந்தும் இலாபம் என்ன தாயின் உயிர் பலி..

இதனால் தான் நான் இன்றைய இளஞர்களுக்கு சொல்ல விரும்புகின்றேன் போதைக்கு அடிமையாகி இவ்வாறு குடும்பத்தில் உள்ளவர்களின் மானத்தையும் உயிரையும் பறிக்காதீர்கள்.

**செல்வி கி. யுட்சினா - தலைமன்னார்**
**செபமாலை இரக்கத்தின் இல்லம்**

# தமிழின் மகிமை!...

-திருமதி இராஜேஸ்வரி சிவராசா-

அன்புச் சிறார்களாலே அந்நிய தேசமதில்
அன்னைத் தமிழ் அழகுறவே மெருகூட்டுகின்றது
ஆற்றலும் செயல் ஆக்கமும் கண்டு மனம்
ஆனந்தம் பொங்கிடவே சிறார் மனதில் விளையாடும் தமிழ்!..

சின்னஞ்சிறு வயதினிலே சிங்காரமான பேச்சுக்களும்
சிறப்புடனே சின்னக் குயில்களாய் பாடல்களும்
அறிவிப்பு அனுபவங்களும் தகவல் செய்தித் தேடல்களும்
அழகு தமிழால் அரங்குகளை அதிரவைக்கும் இளையோர்!...

செந்தேனை அள்ளிச் சொரியும் செந்தமிழாய் உலாவரும்
பைங்கிளி எனப் பேசி ஊடகங்களில் வலம் வருகிறார்கள்
வெள்ளை உள்ளம் கொண்ட வண்டமிழாய் சிறார்களும்
வண்ணம் பல கொண்டு தமிழ் எழுதியே வளர்கிறார்கள்!..

இனிய தாய் மொழி அறிவு வளரும் நிலை தரமன்றோ
இது வானொலிகளிலும் ஒலி தந்த இனிய வரமன்றோ
இன்பத் தமிழின் மகிமை உலகெங்கும் பரவுமன்றோ
இதுவன்றோ தமிழின் மகிமை தரணியில் புகழன்றோ!...

# அம்மா!...

அம்மா என்ற அந்த மூன்று
எழுத்திற்கு ஆயிரம்
அர்த்தங்கள் உண்டு
அதனை உணர்ந்தவன்
அனாதை மட்டுமே
பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்...

பத்து நொடி நம் தொலைவில்
இருந்தாலே பதறிப் போகும்
என் நெஞ்சுக்கு
எப்படி புரியவைப்பேன்
அம்மா உயிருடன் இல்லை
என்பதை......

பசிக்கும் போது பலூட்டி
வளர்ந்த தாய் பக்கத்தில் இல்லை
என்பது எந்தவொரு
குழந்தைக்கும் ஏமாற்றம்தான்.....

நீ உண்மையாகவே தாயை
நேசித்துபார்
கனவில் கூட உனக்கு
காதலிக்க மனம் வராது.....

**கா. தனுசிகா**
**செபமாலை இரக்கத்தின் இல்லம்**
**- தலைமன்னார்**

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## தேவை...

புல் மேய்ந்து கொண்டிருந்தது மாடு. மரத்தில் இருந்த குருவிக் குஞ்சு தாயைக் கேட்டது.."ஏனம்மா மாட்டுக்கு நம்மைப் போல சிறகு இல்லை" தாய்க்குருவி சிரித்தது. "மாட்டுக்கு நம்மைப் போல சிறகு தேவையில்லை" என்றது தாய். தாய்க்குருவி சொன்து...

**"வானத்தில் புல் முளைத்தால் மாட்டுக்கும் சிறகு முளைக்கும்"**

## நிறைவு...

நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது. "எனக்கு ஏன் மதிப்பில்லை" நானும் ஒரு கல்தானே என்று ஓலமிட்டது. தெருவோரத்தில் கிடந்த கடப்பாரை கூறியது "ஏ குறுணி காலம் முழுதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக் கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய்..ஆனால் இரத்தினக்கல் அப்படியா?... நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும்வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது" அப்படி என்றால்?...என்று இழுத்தது குறுணிக்கல். கடப்பாரை சொன்னது...

**"நிறைவவகும் வரை மறைவாக இரு"**

# குறளும் பொருளும்...

**ஊக்கமுடைமை:-**

591. உடைய ரெனப்படுவ தூக்கம.். தில்லா
ருடைய துடையரோ மற்று.

592. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

593. ஆக்க மிழந்தேமென் றல்லவா ரூக்க
மொருவத்தந் கைத்தடை யீயர்.

594. ஆக்க மதர்வினாய் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

595. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனையா துயர்வு.

596. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுத் தள்ளாமை நீர்த்து.

597. சிதைவிடத் தொல்கா ரூரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டுன்றுங் களிறு.

598. உள்ள மில்லாதவ ரெய்தா ருலகத்து
வன்னிய மென்னுஞ் செருக்கு.

599. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

600. உரமொருவற் குள்ள வெறுங்கைய.். தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

# குறளும் பொருளும்...

## மனச்சோர்வு இன்றி முயலுதல்:-

591. ஒருவர் ஊக்கத்தையே சிறப்பாகப் பெற்றிருக்க வேண்டும். முயற்சி இல்லாதவர் எதைப் பெற்றிருந்தாலும் அதைப் பெற்றவர் ஆகார்.

592. ஒருவருக்கு முயற்சியே நிலையான ஆபரணமாகும். பொருளுடைமையாவது நிலை பெறாமல் நீங்கிவிடும்.

593. ஊக்கத்தை உறுதியாக கைப்பொருளாக உடையவர்கள் செல்வத்தை இழந்த காலத்திலும் கலங்கமாட்டார்கள்.

594. சோர்வில்லாமல் முயற்சி கொள்பவரிடம் செல்வமானது அவர் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டுவந்து சேரும்.

595. நீர்ப்பூக்களின் தாள்கள் அவை நின்ற நீரின் அளவின் ஆகும். அதுபோல மக்கள் வாழ்க்கையின் உயர்வு அவரவர் முயற்சியின் அளவினது ஆகும்.

596. எண்ணுவது எல்லாம் உயர்ந்த எண்ணங்களாக இருக்க வேண்டும். உயர்வு கிட்டாவிட்டாலும் ஊக்கம் கொள்வதை விடக்கூடாது.

597. உடல் முழுவதும் அம்புகள் தைத்துப் புண்பட்டிருந்தாலும் யானை தன் பெருமையை நிலை நாட்டும். அதுபோல முயற்சி உடையார் அழிய நேர்ந்தாலும் ஊக்கத்தில் தளர மாட்டார்.

598. ஊக்கம் இல்லாதார் இவ்வுலகில் நாம் வலிமை உடையவர் என்று தம்மைத் தாம் எண்ணி மகிழ்ச்சியை அடையமாட்டார்.

599. பருத்த உடலும் கூரிய கொம்பும் உடையதாயினும் ஊக்கமுடைய புலி தாக்கினால் யானை அஞ்சும் அது போல படைப்பலமுள்ள அரசனும் ஊக்கம் உடையவன் தாக்குதலுக்கு அஞ்சுவான்.

600. ஊக்கம் மிகுதியே ஒருவருக்கு வலிமை. ஊக்கமற்றவர் மரங்களே. உருவ வேறுபாட்டால் மற்றுமே மக்கள் ஆவார்கள்.

# சொற் சங்கிலி.....

(1)

ஒரு சொல்லில் இருக்கும்.அந்தச் சொல்லின் கடைசி எழுத்தில் தொடங்கும் வேறொரு சொல்லைக் கண்டுபிடிக்க வேண்டும் .இவ்வாறு தொடர்ந்து ஐந்து சொற்கள் எழுதவேண்டும்...

உதாரணம்:-

கடுகு......... குடுவை........ வைகாசி......... சிலம்பு......... புன்னகை....

1-தலைவி:-

2-குரங்கு:-

3-பயிற்சி:-

4-பதவி:-

5-அப்பா:-

உங்கள் மொழி வளர்ச்சிக்காகவே இது தரப்படுகின்றது. பயிற்சி செய்து பாருங்கள்...

.....................................................................................................................................

(2) இச்சாடிக்குள் பல சொற்கள் காணப்படுகின்றன. முயற்சி செய்தால் கண்டுபிடிக்கலாம்....




குறிப்பு:-

அதிகமான சொற்களைக் கண்டுபிடித்து மண் சஞ்சிகையின் முகவரிக்கு அனுப்பவேண்டும். அதிஸ்டசாலி ஒருவருக்குப் புத்தகப் பரிசு ஒன்று வழங்கப்படும்..முடிவு திகதி 31.10.2022

-ஆசிரியர்-

# குறுக்கெழுத்துப்போட்டி-189
## (புரட்டாதி - ஐப்பசி - 2022)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 அரசில்வாதிகள் இதைக்கடைப்பிடித்தால்தான் சமூகம் சிறப்புறும்.
10-13 திசை ஒன்று.
18-21 சிரிப்பு ஒத்தசொல்.
36-38 உறுப்புக்களில் ஒன்று.
43-46 இவர்கள் இல்லையேல் இந்த உலகம் இல்லை என்று கூறலாம்.
வ-இ
09-08 பறவை ஒன்று.
18-16 ஊர்வன சில இதனில் வாழும்.
28-25 வாரத்தில் ஒருநாள்.
48-46 இலங்கை வடபுலத்தின் பெரு நிலப்பரப்பு.
கீ.மே
21-07 நமது கைகளில் காணப்படுவது.
30-16 தானிய வகைகளில் ஒன்று.
48-34 பணம் பரிமாற்றம் செய்யும் இடங்களில் ஒன்று.
49-21 வருடத்தில் ஒரு மாதம்.
மே-கீ
01-29 நாட்டின் தலைவரைச் சில நாடுகளில் இப்படியும் அழைப்பார்கள்.
03-38 நீரழிவு நோயாளிகளுக்கு இந்தப் பழமும் நல்லது.
26-47 கொடைக்குப் பெயர் போனவன் இவன்.
32-46 இளம் பெண்களை இப்படியும் அழைப்பார்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# பொய்யெல்லாம்!..

-பாலவர் கோவதன்-

பொய்யொன்றை மறைப்பதற்குப்
பொய்யால் மூடும்
பொய்யர்கள் மிகுந்துள்ளார்
புவியில் இன்று
மெய்யொன்றை எடுத்தியம்பும்
எண்ண மின்றி
மிருதங்கம் வாசிக்கின்றார்
மெய்யைக் கொன்றே
ஐயமின்றிக் களவுகளை
ஆளுகின்றார்
அரசியலின் நாடகத்தைக்
காட்டு கின்றார்
வையத்தில் தன்புகழைக்
கூட்டுதற்கு
வாய் இனிக்கப் பாயாசம்
காய்ச்சு கின்றார் !

பொய்யாட்டம் ஒருநாளில்
முகத்தைக் காட்டும்
புலம்பெயர்ந்தே அதன்மதிப்பைப்
புழுதி யாக்கும்
கைகாட்டி முகத்திரையைக்
கிழித்துப் போடும்
கலிகாலம் மக்களென்றே
உருவை மாற்றும்
மைதீட்டும் வேளையெல்லாம்
மயங்கி வீழும்
மக்களுக்கு விழிப்புணர்வால்
மயக்கம் தீரும்
ஐயங்கள் அறுவடைக்கோர்
ஆள னுப்பும்
அடிமாடாய்க் கிடந்தநிலை
அன்றே மாறும் !

கீழறுப்பு வேலையெல்லாம்
இனியும் வேண்டாம்
கிழவிக்கும் ஒப்பனைகள்
செய்ய வேண்டாம்
தோழனைப்போல் கைதோளில்
போட வேண்டாம்
துளைத்தெடுக்கத் துப்பாக்கி
எடுக்க வேண்டாம்
வாழவழி இல்லாமல்
வாடும் போது
வறுத்தெடுக்க முயன்றாலோ
வடிவம் மாறும்
கோழையென்றே யாருமில்லை
குணமோ வேறு
குமுகாயம் கொதித்தெழுந்தால்
மாற்றம் நூறு !

அரசியலின் முதலீடாய்
இட்டார் பொய்யை
ஆயிரத்தில் ஒருசிலரே
வளர்த்தார் மெய்யை
முரசொலிக்கும் சிலர்குடும்பம்
இதுவாய்ப் போச்சே
முகம்சுளிக்கும் நிலைவந்தே
முனங்க லாச்சே
இரவுக்குப் பின்பகலே எழுந்து
பார்க்கும்
இதைப்போலே பொய்யொருநாள்
இதயம் வேர்க்கும்
கரமிணைந்தால் கசடெல்லாம்
கபடி ஆடும் !..

## நதியே வருக!

கருவே ஏந்தும் விதையாய்க்
கனிவாய்ப் பிறக்கும் அருங்கவிதை!
உருவம் மின்னப் பிறக்கும்
உணர்வே பெருகும் நெஞ்சத்துள்
வருமே வாழ்வில் வசந்தம்
வண்ண வண்ண மலராக!
திருவாய்க் கமழும்! நாளும்
திடமாய் மனத்தைப் புடம்போடும்

கலையே மிளிரும் பாக்கள்
கனிந்தே உருகும் இறைநாமம்!
சிலையாய் மனத்தில் நிற்கும்
சிறப்புத் தருமே எந்நாளும்!
தலையா யெண்ணிப் போற்றித்
தாயாய் வணங்கி வாழுகிறேன்!
விலையே காணா விந்தை
விடிவாய் உதிக்கும் நற்சிந்தை

கவிதைக் கலையே! பண்ணின்
கடலாய்ப் பெருகும் தமிழமுதே!
குவியும் சொற்கள் என்னுள்
கூர்மை அறிவை யளித்தனவே!
புவியில் பிறக்கும் புதுமை
புகழே சேர்க்கும் நல்வலிமை
தவியாய்த் தவித்துப் பிறக்கும்
தமிழே! தாயே என்னுயிரே!

**பாவலர் - நகுலா சிவநாதன்**
.

## அம்மாவின் அடையாளங்கள்..

வலிகள் அனைத்தையும் சுமந்த
உடல்.
அவற்றை புன்னகையில் மறைத்த
முகம்.

வன்சொல்லை என்றும் பேசிடாத
நாக்கு.
அணிகலன் ஏதும் அணியாதக்
கழுத்து.

உணவைப் பறிமாறிக் களைத்தக்
கைகள்.
விடைத்தாள்களை விடாது
திருத்திய விரல்கள்.

நாள்தோறும் நடையாய் நடந்த
கால்கள்.
தேய்ந்த காலணிகளை அணிந்த
பாதங்கள்.

பழைய புடவையை அணிந்த
உடம்பு.
தமிழ்பாடம் புகட்டிய தமிழ்
ஆசிரியை.

இவைகள்,
என் அம்மாவின் அடையாளங்கள்.
யாரேனும் கண்டால் சொல்லுங்கள்,
அன்புலகில் எங்கேனும் இருந்தால்.

**- கவிதா. அ. கோ**

## வணபிதா சேவியர் தனிநாயகம் அடிகளார்...



கவி நாயகன் உலகத் தந்தை
சேவியர்தனிநாயகம் அடிகளார்களில்
எண்ணிடத்தான் முடியுமா சேவைதனை
இவரிடத்தில்...

நாவன்மை பேச்சாளர் நல் எழுத்தாளர்
தரணி மெச்சும் உச்சப் பண்புடையோர்
உதித்தாரே ஊர்காவற்றுறை நெடுந்தீவு
கரம்பொன் கிராமமதில்...

எண்ணற்ற சாஸ்திரங்கள் முறையாய்ப்
பயின்று திருமறையெனும் பெருமறை
வழி வாழ்ந்து உலகெலாம் சென்று
அன்போடு அறமாய் மேற்கொண்டாரே
தூய துறவறமாய்...

வேதம் சொன்ன பயண விழி தோய்ந்து
ஆதாம் ஏவாள் கண்ணின் மணி ஈர்த்து
கண்ணை இமை காப்பது போல
என்றும் நாதியற்ற மக்களைக் காத்த
மேலோன்....

பல பல மொழிகள் கற்றுத் தேர்ந்த
பன்மொழிப்புலவர் இவர் என்றால்
தமிழ் கூறும் நல்லுலகின் உலகத்
தந்தை ஆற்றலை அறியாதார்
யாரப்பா இவ்வுலகில்...

எழுதிய நூல்கள் ஏராளமான
பட்டங்கள்அத்தனையும் முத்துக்கள்
இத்தனைக்கும் மூச்சுத் தாகமென
தமிழ்த் தூதோடு தூபமிட இறையியல்
முனைவர் பட்டமதில் சிகரந் தொட்டு
யாழ் நூல் நிலையம் அமைக்க
முக்கிய காரணகர்த்தரே...

தமிழுக்கு முதுகெலும்பாய் நின்று
உலகத் தமிழாராய்ச்சி இலங்கையில்
முன்னின்று நடத்தி மனித
உள்ளங்களில் எத்தனை
நூற்றாண்டானாலும் என்றென்றும்
வாழ்ந்திடுவார் சுடர் விளக்காய்.!...

**- ராணி சம்பந்தன் -**

## எனது முதல் கவிதை...

கோயிலுக்குச் சென்றேன்
அழகிய சிலையை
அங்கே கண்டேன்
ஆர்வத்தோடு ரசித்தேன்
மதி மயங்கி நின்றேன்!..

**ஆர்த்திகா - எசன் - யேர்மனி.**




(29ம் பக்கம் பார்க்கவும்)



## மகாகவி பாரதியார்....

- இரா. சம்பந்தன் -

ஓ ! இந்தக் கவிஞனின்
எழுதுகோல் உழுத பரப்பெங்கும்
பழுதிலாப் பயிர் வளர
பசுமை பாரெங்கும் படர்ந்தது .

விடுதலைக் கீதம் பாடிய
வித்தகக் கவிஞனால்
விலங்குகள் தெறித்தன
விழுமியம் தழைத்தது .

பெண்களின் கைவிலங்கும்
மண்ணதன் கால்விலங்கும்
கழன்று விழுந்தன
கனன்றிடும் கவிதை வரிகளெனும்
சுழன்றிடும் வாளின் வீச்சினால் .

தீண்டாமைத் தீ
மூண்டெரிந்த நாட்களில்
கவிதைமழை பொழிந்த கார்மேகம் !

பேதைமைப் போர்வைக்குள்
முடங்கிக் கிடந்த
பாரத மாதா கண்விழிக்க
சாளரங்க ளினூடு பரவிய
கதிரொளிதான் பாரதி !

யாருக்கும் பணியாத மிடுக்கு
அவரின் மீசை முறுக்கு !
சுதந்திர தாகம் சாதீய
மறுப்பவரின் மூச்சு !

எட்டய புரத்துச் சிங்கம்
எழுந்து நின்று கர்ஜித்தால்
முட்டவரு மொருபகை
மூச்சிரைத்துப் பின்வாங்கும் .


தருமநெறி மறந்து
வருணங்கள் வகுத்தவரால்
தாழ்ந்தவனாய் வாழ்ந்தவனின்
தோளில்
பூணூலைத் தானிட்டுப் பூமியில்
மனிதம் நிலைபெறச் செய்தவர் !

பத்திரிகைத் துறையதில்
பளிச்சென மின்னி
சத்தியத்தை நிலைநிறுத்த
சந்ததமும் முயன்றதனால்
தலைமறைவு வாழ்க்கை .

கலைமகள் குடியிருக்கும்
பாரதியின் குடிசைக்குள்
அலைமகள்குடி யிருப்பாளா ?
உலையிலிட அரிசியு மின்றி
உலைச்சலுற்ற இல்லறம் .

இந்த முண்டாசுக் கவிஞன்
முக்குளித்த முத்துக்களை
பின்னாளில் உலகு போற்றியது !
முன்னாளில் தூற்றியதாம் .

காணிநிலம் வேண்டுமென்று
காலமெல்லாம் கனாக்கண்ட
கவிஞனைக் கவர்ந்து செல்ல
காலனன்று யானையுள் புகுந்து
மதமென வெளியேறி நோய்தந்து
தன்னிலக்கைத் தானடைந்தான் .



## ஈ.வே.ரா பெரியார்...

பெரியார் இவரை தமிழினத்தில் அறியாதார் எவர்
பகுத்தறிவுப் பாதை கண்டு ஒளிபடைத்த மூலவேர்
மனிதனை மனிதன் நோகப்பார்க்கும் பார்வைச் சாடி
சாதனைப் புரட்சி செய்ததனால் பெரியாரென்றானவர்...

அவர் ஊன்றிவரும் தடியில் சற்று வளைவு இருக்கக்கூடும்
கொண்ட கொள்கையில் நடுக்கம் இருக்காது எப்போதும்
சமூகக் கொடுமைகளை கடவுள்களால் மறைத்தது கண்டு
கடவுள்களை மறைத்து மனிதத்தைக்காட்டிய அணுக்குண்டு...

ஒவ்வோர் மனதிலும் ஊறிக்கிடக்கும் தீண்டாமை
தனியே தமிழனுக்கு அகத்திடை சொருகிய அழுக்காமை
இன்றுவரை எவரும் தொடவிரும்பாத சமூக இயலாமை
தொட்டுப் போராடியதால் எதிரி இன்றும் அவர் அருகாமை...

இவர்போல் வீரமும் உறுதியும் கொண்டவர் எவருமில்லை
சேவை செய்வதென்றால் தெய்வமும் விதிவிலக்கில்லை
குடும்பம் மொத்தமாய் களம்வந்து போராட்டம் செய்ய
வைத்ததுதான் சமூக வாய்மை இன்றும் நின்று உய்ய...

தமிழர்களெல்லாம் ஆரிய அடிமை என்று சொன்னார்
இதில் கீழ் என்பதும் மேல் என்பதும் நம் கேவலமென்றார்
மூடமைகளும் சாதியங்கும் சமூகக் குப்பைகளென்றார்
வெட்டித் தீயிட்டு அழிப்பதே என் சமூகக்கடன் என்றார்...

இன்று அரசியலில் ஈடுபட விரும்புவர்கள் எவரும் - நல்ல
பணம் போட்டுபணம் சேர்க்கும் சுயநலக் கிருமிகளே
கோடீஸ்வரரான பெரியார் கையில் தூசும் இன்றி வந்தார்
சிக்கனமும் சத்தியமும் சிறப்புடன் சீர்பெற நின்றுழைத்தார்...

**ப.பசுபதிராசா**

## ஆடி!...

ஆடி வந்த வேளையிலே
ஆறா ரணங்கள் எம்முள்ளே!
ஓடி வருதே கண்முன்னே
ஓங்கி நின்ற கலவரங்கள்!
தேடித் தேடித். தமிழரையே
தாக்கி யழித்த நாட்களதே!
கூடிப் பேசிக் கோட்டான்கள்
கொள்ளி போட்ட காட்சிகளாய்!

பூட்டி வைத்த சிறைக்குள்ளே
பறித்தே எடுத்தார் விழிகளையும்!
வாட்டி வதைத்துக் கொல்வதையே
வரலா றாக்கும் கயவர்கள்!
ஏட்டில் இல்லாக் கொடுமைகளை
எளிதாய் முடிக்கும் தலைமைகள்!
மூட்டி வைத்த தீக்கணைகள்
முடிய வில்லை இன்றுவரை
கால மோடி மறைந்தாலும்
கலையாக் கோல மிதயத்தில்!
ஏல மிட்டே உடமைகளை
ஏது மின்றி உயிரழித்த
சீல மறியா வழிகாட்டிகள்
சிதைத்தே விட்டார் நாட்டினையே!
ஞால மெங்கும் வந்திடட்டும்
நலத்தை விதைத்தே
ஆடியுமே!

**கீத்தா பரமானந்தன்**

## சகுன நம்பிக்கை...

காலையில் துயிலெழுந்து
உடம்பைத் தூய்மையாக்கி
கடவுளை வணங்கவே
இது இறை நம்பிக்கை
வேலைக்குப் போகுமுன்
சாத்திரம் பார்ப்பதில்
நேரம் காலம் பார்த்து
சகுனம் பார்ப்பதில்
மனதில் தவறான நம்பிக்கை
வெளியே நல்ல காரியத்தில்
பூனை குறுக்கே வந்து போக
அதுதான் வேலையானது
வீட்டில் முற்றத்தில் காகம் கரைய
விருந்தாளி வருவதை
உறவுகளிடம் தெரிவிக்காமல்
காத்திருக்கும் தொலைத்தொடர்பு
நல்லதொரு செயல் செய்திடவே
பல்லிசொல் பலன் பார்த்து
கெடுதலென காரியம் நின்றுவிடுமோ
நள்ளிரவில் நாய் ஊளையிட
வீட்டிற்கு ஆபத்து வந்திடுமென
பல்லியும் நாயும் உறவுகளோ
வெளியில் புறப்பட ஆயத்தமாக
வாசலில் தும்மலும் இருமலும்
பின்நின்று கூப்பிடலும்
அபசகுனம் எனக் கொள்வனவோ
செய்கின்ற செயல்கள்
செவ்வனே நிறைவேற
மூடநம்பிக்கைகளைக் கைவிட்டே
இறைவன் நம்பிக்கையை
வைத்து உயர்வோம்!..

**திருமதி ஜெயா நடேசன்**

# அன்னை திரேசா!..



கருத்தரிக்காமல்க்
கையிலே ஐந்து ரூபாயுடன்
விரிந்த இந்தவுலகத்திலே
தைரியமான பெண்ணாயத்
தெரிகிறாள் பரிவிரக்கக்
குணத்தால்க் கன்னியவள்
பருசுத்த அன்னையாய்

பிரார்த்தியுங்கள் நீங்கள்
கடவுளருகே செல்லலாம்
பிறரன்புப் பணிகள்
செய்யுங்கள் கடவுள்
உங்களருகே வருவார்
என்றவாசகமது நேசமாய்த்
தேகத்தின் உணர்வுகளில்
ஓங்கி ஒலித்து வலிநீக்க
வழிசொல்கிறதே

கால்நடையாய்த்
தொழுநோயாளிகளை
மனமகிழ்வுடன் பார்க்கத்
தெருவெங்கும்
தேடித்தேடி அலைந்தாள்
பணத்தினைப்பெறப்
பிச்சைக்காரியாய்ப்
பட்டினிபோக்கி அடுத்தவரை
மகிழ்விக்கஅல்லும் பகலும்
அயராத தாகத்தோடு
அண்ணல் இயேசுவின் சாட்சியாய்

அடுத்தவர் சிரிப்பில் அவள்
ஆண்டவனைக் கண்டாள்
ஆதலால் ஆயுளுக்கும்

அன்னை திரேசாவின்
அர்ப்பணிப்பான சேவையை
இவ்வுலகுள்ளவரை எல்லா நாவுகளும்
ஈர்ப்புடன் இயம்பி நிற்க்கும்

உன்னத உழைப்பை
ஊரெங்கும் ஒவ்வொருவரும்
ஊதியத்தை நோக்காது
எட்டுத்திக்கும் இயலுமானதை
எல்லோருக்கும் செய்யுங்களென
எக்காளமாய் ஒலிக்கச் செய்கிறாள்

எல்லா மக்களும் ஏற்றங்காண
எண்ணங்களில் எண்ணினாள்
ஐயமில்லாத பணியால்
ஆண்டுகள் கடந்தாலும்
ஒற்றை அன்னையாய்
ஒப்பற்ற சேவையை
ஒளியாய்ப் பரப்பி உவப்பாய் வாழ
ஓதுங்கள் ஒதுக்குங்கள்
அடுத்தவருக்கும்
அல்லல்ப்படுவோருக்கும்
ஆவனசெய்யும்
ஔடதமே அஃது என அவள்
தியாகத்தைப்போல மகிழுங்கள்
மகிழ்வியுங்கள் ஏழுலகு
ஏற்றம்பெறட்டும்!..

**ஆக்கம்-திரேஸ் மரியதாஸ்**
**லண்டன்,சட்டன்**

## கடவுளும் மனிதனும்...

-சத்யா பிரான்சிஸ்-

கடவுள்
களி மண்ணிலிருந்து
மனிதனைப் படைத்தார் ..
மனிதன் கல்லிலிருந்து
கடவுளைப் படைத்தான்..
கடவுளுக்குமனிதன் தேவை
மனிதனுக்கும் கடவுள் தேவை..
ஒருவர் தேவையை
ஒருவர் ஆத்மார்த்தமாகப்
பூர்த்தி செய்து கொள்கிறார்கள்
கடவுள்
மனிதனால் இயங்குகிறார்
மனிதனும் கடவுளால்
இயக்கப்படுகிறான்..
கடவுளின் ஆன்மா மனிதன்
மனிதனின் ஆன்மா கடவுள்..
இருவருக்கும் என்ன வேறுபாடு?
கடவுள் என்ற வார்த்தை
மூவுலகை ஆள்வதால்
மனிதன்
மூவுலகை வென்று
கடவுளை ஆள்கிறான்..
மதம் என்ற மடமையில்
மனிதன் கடவுளைப் பத்திரமாக
சன்னிதானத்தில் ஒளித்து வைக்கிறான்..
மனிதனுக்கு அஞ்சிகடவுளும்
சன்னிதான சிலையில்
ஒளிந்து கொள்கிறார்..
கடவுளுக்குக்
கடத்தல்காரர்களால்
ஆபத்துண்டு
மனிதனுக்கு எட்டு திசையிலும்
தேடி வரும் பேராபத்து..
தன்னைக் காக்க
மனிதன்
கடவுளில் ஒளிந்து கொள்கிறான்..!
கடவுள் மனிதன்
ஒரே இனம்
மனிதன் கடவுள்
சரி நிகர் இனம்!

......................................

## புதிய வரவு!..
## கவிச் செல்வங்கள்...

### காற்று!..

மரங்களைப் பார்க்கையில்
கண்கள் மயங்கினவே
மரக் கொப்புக்கள்
அசைந்தாடவே
இதமான காற்று வந்து
என் உடலை வருடியதே!..

-செல்வி ஆர்த்திகா-

### நெருப்பு!..

கல்லில் கல்லைத் தேய்த்து
உருவாகினாலும் - பூமியில்
இது இல்லாமல் எதுவும் நிகழாது
கெட்டகுணங்களைக் கொண்டாலும்
பல விடையங்களுக்கு உதவும்
ஐம்பூதங்களின் ஒன்றான நெருப்பு!..

-செல்வி நீதினி தவகுமார்-

(இந்த இரு மாணவிகளும் ஏசன் தமிழ்மொழிச்சேவைபாடசாலையைச் சேர்ந்தவர்கள். இவைதான் அவர்களின் முதல்கவிதை வாழ்த்தி வரவரவேற்போம்)

# கண்ணீர் வரைந்து கருகிய ஓவியம்!..

இலச்சிய ஏணிகளை
எட்டுமுன் தீவைக்கும்
துட்டரின் துருப்பிடித்த
தொழுநோய்க் கரங்கள்..

நச்சுப் பாம்புகள்
நடமாடும் நகரங்கள்
நரகத்தின் வாயில்களில்
போதைவஸ்து புதையல்கள்..

அதிகார அழுக்குகளே
விதைபோட்டு விளையவைத்த
பொருண்மிய விவசாயத்தில்
காமக் கமக்காரர்கள்..

பத்தும் பதினாறும் நிறையாப்
பட்டாம் பூச்சிகளெல்லாம்
பற்றைக் காடுகளுள்ளும்
பாழடைந்த கிணற்றினுள்ளும்
செத்துக் கிடக்கின்ற
சேதிகள் திகிலூட்டும்..

கனவுகளை ஏற்றிப்பறக்க
காத்திருந்த காற்றாடியினை
கசக்கித் திருகியெறிந்த
வேதனையின் வலியுணர்க..!

சமூகத்து ரணங்களில்
சீழ்வடியப் பார்த்தபடி
நாக்கில் எச்சில் ஒழுகும்
நரிகளும் நாய்களாலும்
பிய்த்துக் குதறப்பட்ட
பேதைகளின் கனவுவனம்..

சிதைக்கப்பட்ட சிறகுகளில்
குருதியின்னும் ஒழுகும்
பீதியின் வடுக்களில்
துளிர்ப்புகளோ கருகும்..

நசுக்கும் ஏழ்மையிலும்
நகர்வுகளே இலக்குகளாகிய
சிதைந்த சிறகுகளுக்கு
ஈவு கண்ணீர் மாத்திரமா..?


பாலூட்டிய மார்புகளும்
பசிபோக்கிய கரங்களும்
வெறுமையில் பதறிதுடித்திடும்
வேதனைக்கென்ன பரிகாரம்
நீதிவந்து உறையிடுமோ
நிலையாயது உறைந்திடுமோ..?

காலமும் ஞாலமும்
கடமையைப் பார்க்குமோ
அறநெறிகள் அடியறுந்தே
அற்றுத்தான் போகுமோ..?

**அம்பலவன்புவனேந்திரன்..**

மண் சஞ்சிகை (இதழ் 214) அட்டைப்படக் கவிதை:

**-அம்பலவன் புவனேந்திரன்-**




இருவிழி யொளியினில் உருகிடும் நேசம்
இதயத்தி லுறைந்ததுவே
மருவிடும் பணியில் தருகின்ற பரிவினில்
மனிதமே துளிர்த்ததுவே..!
நெருடலில் நிமிர்ந்து முருகினை துறந்து
நெகிழ்வுடன் பூத்ததுவே

வருடலில் வகுத்த குருத்தவத் துறவே
வாழ்வென வானதுவே..!
செருக்கினைச் செதுக்கி திருவருளென்றே
சேவையில் இறக்கியதே
கருவினைச் சுமக்கா பெருவரம் பெற்று
கண்ணுக்குள் காத்ததுவே

தருவென விரிந்து கருணையை ஈந்து
தயாபரி யானதுவே..!
மருத்துவ பணிதான் தருமரு ளென்று
மகத்துவ மானதுவே
பெருகிடும் அன்பை பருகிட வூட்டிப்
பிணியரை மீட்டதுவே

உருவினைப் பாரா கருணையின் தாயாய்
உலகினை யாள்கிறதே..!
வருகின்ற காலம் துருவில்லா ஞாலம்
வழி வழி வாழ்த்திடுமே
அருளுட னமைந்த பெருமையி னுணர்வை
அகிலமே வணங்கிடுமே..!

# ஐக்கிய நாடுகள் சபை...

செல்வி சாமினா சிவதாசன்...



"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே" எனப் பாரதியார் பாடியுள்ளார். இந்த வைர வரிக்கு அமைய உயர்வு, தாழ்வு என்ற மனப்பான்மை நீங்கி ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற நோக்குடன் இரண்டாம் உலகப் போருக்குப்பின் 24.10.1945 இல் 51 நாடுகளுடன் அமெரிக்கா - சான்பிரான்சிஸ்கோ நகரில் (San Francisco) ஐக்கியநாடுகள் சபை ( United Nations Organization ) ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கியநாடுகள் என்பது எளிய பொருளில் சமாதானமாக, ஒன்றாக இருக்கும் பல நாடுகளின் ஒருங்கிணைப்பு ஆகும். ஐக்கியநாடுகள் சபையின் முன்னோடியாக லீக் ஆ∴ப் நேஷன்ஸ் (Legue of Nations) திகழ்ந்தது. இது முதலாம் உலகப் போருக்குப் பின் உலகில் நிரந்தரமான அமைதியைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் உலக நாடுகள் இந்த அமைப்பில் சேருவதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட முடியாமல் இரண்டாம் உலகப்போரும் ஆரம்பித்தது.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் மேலும் பெருமளவு உயிரழிவும் பொருளாதாரப் பின்னடைவும் ஏற்பட்டதால் ஐக்கியநாடுகள் சபை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற யோசனை உருவானது. வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் பிராங்ளின் டி ரூஸ்வெல்ட் ஆகியோர் 1942 ஆம் ஆண்டு "ஐக்கிய நாடுகள்" என்ற வார்த்தையை உருவாக்கினர். கொடூரமான இரண்டாம் உலகப் போருக்குப் பின் மீண்டும் ஒரு உலகப்போர் உருவாகாமல் தடுக்கும் நோக்குடன் 26 நாடுகள் 01.01.1942ஆம் ஆண்டு Declaration of United Nations என்ற அமைப்பு உருவாக கையெழுத்து வைத்தார்கள். இந்தக் கையெழுத்து மூலம் அச்சு நாடுகளான இத்தாலி, யேர்மனி மற்றும் ஜப்பானுக்கு எதிரான போராட்டத்தில் ஒருவருக்கொருவர் உதவ ஒப்புக்கொண்டனர். இதனால் மேலும் 19 நாடுகள் 1945வரை இணைந்தன.

இன்று 193 நாடுகள் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையானது உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வேர்விட்டுப் பரந்து உலகத்தையே தன் கைக்குள் வைத்திருக்கும் ஒரு மிகப்பெரும் சக்திகொண்ட சர்வதேச அமைப்பாக விளங்குகின்றது. காலப்போக்கில் ஐக்கிய நாடுகள் சபை முடிவெடுக்கும் செயல் முறைகளுக்குப் பொறுப்பாக ஆறு அங்கங்கள் உருவாக்கப்பட்டன.

**1-ஐக்கிய நாடுகள் பொதுச்சபை** (UN General Assembly)

இச்சபையானது உறுப்பு நாடுகளுக்கான கட்டாயமற்ற அறிவுறுத்தல்களை வழங்குவதோடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கான புதிய உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்தல் போன்ற பல சேவைகளை ஆற்றுகின்றது.

**2-ஐக்கிய நாடுகள் செயலகம்** (UN Secretariat)

இச் செயலகமானது அமெரிக்கா - நியூயோர்க் (New York) நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகச் செயலகக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டு அமைப்புகளின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு உதவுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இதன் தலைவராக விளங்குவார். பொதுச் சபையால் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை புதிய பொதுச்செயலாளர் தெரிவு செய்யப்படுவார். 2017ம் ஆண்டிலிருந்து போத்துக்கல் நாட்டைச் சேர்ந்த அந்தோனியோ மானுவல் டி ஓலிவீர குத்தேரசு (Antonio Manuel de Oliveira Guterres) இந்தப் பதவியில் இருந்து வருகின்றார்.

**3-அனைத்துலக நீதி மன்றம்** (UN International Court of Justice)

சர்வதேச சட்டங்களுக்கான இந்த நீதி மன்றில் நாடுகளிடையே உள்ள பிணக்குகளை மாத்திரமே அனைத்துலக சட்டத்தின் அடிப்படையில் விசாரித்து தீர்ப்பு வழங்கப்படும். ஐக்கி நாடுகள் பொதுச்சபையால் பெரும்பான்மை அடிப்படையில் 9 வருடங்களுக்கு ஒரு முறை 15 நீதிபதிகள் தெரிவுசெய்யப்பட்டு இச் சேவை நடைபெறுகின்றது.

**4-ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை** (UN Security Council)

இச்சபையானது நாடுகளிடையே அமைதியைப் பேணி பாதுகாப்பைக் கட்டுப் படுத்தி அதனைத் தக்க வைக்கும் பொறுப்புள்ள மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பாகும். இதில் சீனா, பிரான்ஸ், அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்ஷியா ஆகிய ஐந்து நாடுகளுக்கு மட்டுமே தடுப்பு அதிகாரம் (Veto) உண்டு. இந்த நாடுகளுடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுச்சபையால் தற்காலிக பத்து உறுப்பு நாடுகள் தெரிவு செய்யப்படும். இச்சபையின் உறுப்பினர்களாக மொத்தம் 15 நாடுகள் உள்ளன.

**5-ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூகச்சபை** (UN Economic and Social Council

இவ் அமைப்பானது பொருளாதாரம் மற்றும் சமூகத்தரங்களில் நாடுகளிற்கு

இடையே கூட்டுறவைப்பேணி நாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான பல் வேறு செயற்பாட்டு அங்கங்களைக் கொண்டு துணை நிறுவனங்களிடையே கூட்டுறவைப் பேணும் அமைப்பாக உள்ளது. இச்சபையானது 54 உறுப்பு நாடுகளைக்கொண்டு இயங்குகின்றது.

**6-ஐக்கிய நாடுகள் பொறுப்பாட்சி** (UN Trustship Council)

இது முதலில் லீக் ஆ.ஃப் நேஷன்ஸ் ஆணைகளாக இருந்த காலனித்துவ உடமைகளை நிர்வகிக்க வடிவமைக்கப்பட்டது. இறுதியாக நமீபியா நாடு சுதந்திரம் பெற்றதுடன் செயற்பாடு அற்றுப் போயுள்ளது. இம்மன்றமானது 1994ல் இருந்து செயற்பாடற்றுள்ளது.

இந்த ஐந்து அமைப்புகளுள் நான்கு தலைமைச் செயலகமான நியூயோர்க் நகரில் அமைந்திருக்கின்றன. மேற்குறிப்பிட்டவை தவிர சில முக்கிய அமைப்புகள் நெதர்லாந்து, ஜெனீவா, வியன்னா, நேரோபி, பாரீஸ் போன்ற நகரங்களில் இயங்குகின்றன. ஐக்கியநாடுகள் அவையுடன் தொடர்புடைய மேலும் பல அமைப்புகள் உலகின் பல்வேறு இடங்களில் உள்ளன.

இன்று ஐக்கிய நாடுகள் சபைக்குப் பல துணை அமைப்புகள் ஆரம்பித்து இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (United Nations Fund Unicef) ஆகும். இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இரண்டாம் உலக யுத்தத்தில் அழிவுற்ற நாடுகளில் வாழும் சிறுவர்களுக்கு உணவு மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் 1945 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்னொரு துணை அமைப்பாக உலக சுகாதார அமைப்பு (UN World Health Organisation -WHO-) 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது உலகெங்கும் வாழும் மக்களுக்குச் சிறந்த ஆரோக்கியத்தை வழங்க பாரிய முயற்சியை மேற்கொண்டு வருகின்றது. மற்றும் ஒரு மிக முக்கியமான துணை அமைப்பாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (United Nations Educational Sciennstific and Cultural Orgnization - Unesco ) ஆகும்.

இது 1945ம் ஆண்டு உறுப்பு நாடுகளிடையே கல்வி, அறிவியியல், பண்பாடு மற்றும் தொடர்புத் துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் தொடங்கப்பட்டது. தற்போது மொத்தமாக 19 துணை அமைப்புகள் உலகெங்கும் தனது சேவையை உறுப்பு நாடுகளில் வாழும் மக்களுக்கு வழங்குகின்றது.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகளாக சீனம், ஆங்கிலம், ஸ்பானிஸ்,பிரென்ஸ், ரஷ்ஷியன் என்பன காணப்படுகின்றன. பொதுச்சபை, பாதுகாப்புச்சபை பொருளாதார சமூக நலசபை ஆகியவற்றில் அரபு மொழியும் உத்தியோகபூர்வ மொழியாகச் சேர்க்கப்பட்டது.

எனவே எதிர்காலத் தலைமுறையினரைக் காப்பாற்றுவது, மனித உரிமைகளை உறுதிப் படுத்துதல் மற்றும் அனைத்து நபர்களுக்கும் சம உரிமை உருவாக்குதல், மிக முக்கியமாக இன்னொரு மாபெரும் போரை ஏற்படுத்தாதிருத்தல் மட்டுமல்லாது ஐ.நா. சபையின் அனைத்து உறுப்பு நாடுகளினதும் மக்களுக்கு நீதி, சுதந்திரம் மற்றும் சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் பரந்த நோக்கத்தையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக அகதிகளுக்குப் பாதுகாப்பு அளித்தல், தீவிரவாதத்தைத் தடுத்தல், மக்கள் ஆட்சியை மேம்படுத்துதல், குழந்தைகளின் நலன் பேணுதல், அம்மை நோயினால் ஏற்படும் இறப்பு விகிதத்தை குறைத்தல், போலியோ நோயை முற்றாக ஒழித்தல், மலேரியா இழப்புக்களைத் தடுத்தல் மற்றும் உணவு உற்பத்தியைப் பெருக்குதல் போன்ற உப நோக்கங்களையும் கொண்டே ஐ. நா. சபையானது உருவாக்கப்பட்டது.

சில உறுப்பு நாடுகள் இந்தக் குறிக்கோள்களை அடைந்துள்ளன. வேறு சில நாடுகள் இந்த இலக்கினை எட்டவில்லை. உதாரணமாக தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ரஷ்ஷியா - உக்ரைன் போர் எனக்குறிப்பிடலாம். இப்படியாக உலகெங்கும் கருத்து மோதல் காரணமாக நாடுகளிற்கு இடையே போர் நடைபெறுகின்றது. ஆனாலும் ஐ.நா. சபையானது தனது தீவிர செயற்பாட்டினால் மூன்றாம் உலகப்போர் நடைபெறாமல் பாதுகாத்து உலகத்தையே தன் கைக்குள் வைத்திருக்கும் சக்தி வாய்ந்த மாபெரும் அமைப்பாகத் திகழ்கின்றது என்பது பாராட்டத்தக்க விடையமாகும்!..

........................................................................................................................................

## உங்களுக்குத் தெரியுமா?..

1-நமது உடலில் மொத்தம் 206 எலும்புகள் உண்டு.

2-ஒரு சராசரி மனிதன் ஆண்டு ஒன்றுக்கு ஒரு தொன் உணவை உட்கொள்ளுகிறான்.

3-ஒரு சராசரி மனிதன் ஒரு நிமிடத்தில் 150 லீட்டர் காற்றைச் சுவாசிக்கின்றான்.

4-நமக்கு ஏற்படும் தும்மலின் வேகம் மணிக்கு 160 கிலோ மீட்டர்.

5-பிறந்த குழந்தை அழும்போது கண்ணீர் வராது.

## சும்மா", "சும்மா"......

**-நாவலர் நெடுஞ்செழியன்-**

தி.மு.க.வில் இருந்தபோது, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், ஒரு சொற்பொழிவில் "சும்மா" என்ற தலைப்பில் நீண்டநேரம் உரையாற்றினார். அந்த மலரும் நினைவுகளை இங்கே பார்ப்போம்...

சும்மா:-

"சும்மா இதைப் படியுங்கள், நிச்சயம் நீங்கள் அசந்துதான் போவீர்கள்!!

உலகில் தோன்றிய பல மொழிகள் அழிந்து, இருந்த இடமே தெரியாமல் போயிருக்கின்றன!

தமிழ் மட்டும் இன்றளவும் பேச்சிலும், எழுத்திலும் நீடித்து நிலைத்து தன்னையும், தான் சார்ந்த இனத்தையும் பெருமைப் படுத்திக்கொண்டிருக்கின்றது.

"சும்மா" சொல்லுவோம் தமிழின் சிறப்பை!!

அடிக்கடி நாம் பயன்படுத்தும் வார்த்தை தான், இந்த "சும்மா".

அதுசரி "சும்மா" என்றால் என்ன?

பேச்சுவழக்குச் சொல்லாக இருந்தாலும், தமிழ்மொழியில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு வார்த்தை தான் இந்தச் "சும்மா".

"சும்மா" என்கிற இந்த வார்த்தைக்கு மட்டும் தமிழில் 15 க்கும் மேற்பட்ட அர்த்தங்கள் உண்டு என்றால் பாருங்களேன்...

வேறு மொழிகளில் இல்லாத சிறப்பினை, நாம் அடிக்கடி கூறும் இந்த "சும்மா" என்ற வார்த்தை அழகாக எடுத்துக்காட்டுகிறது...

1. கொஞ்சம் "சும்மா" இருடா?
(அமைதியாக / Quiet)

2.கொஞ்சநேரம் "சும்மா" இருந்துவிட்டுப் போகலாமே? (களைப்பாறிக் கொண்டு / Leisurely)

3.அவரைப் பற்றி "சும்மா" சொல்லக் கூடாது!
(அருமை / infact)

4.இது என்ன "சும்மா" கிடைக்கும் என்று
நினைத்தாயா?
(இலவசமாக / Free of cost)

5. "சும்மா" கதை விடாதே?
(பொய் / Lie)

6. "சும்மா" தான் இருக்கு. நீ வேண்டுமானால் எடுத்துக் கொள்.
(உபயோகமற்று / Without use)

7. "சும்மா", "சும்மா", கிண்டல் பண்ணுகிறான்
(அடிக்கடி / Very often)

8. இவன் இப்படித்தான், சும்மா சொல்லிக்கிட்டே இருப்பான்.
(எப்போதும் / Always)
9.ஒன்றுமில்லை "சும்மா" தான் சொல்லுகிறேன்-
(தற்செயலாக / Just)
10. இந்தப் பெட்டியில் வேறெதுவும் இல்லை "சும்மா" தான் இருக்கின்றது.
(காலி / Empty)
11. சொன்னதையே "சும்மா" சொல்லாதே.
(மறுபடியும் / Repeat)
2. ஒன்றுமில்லாமல் "சும்மா" போகக்கூடாது .
(வெறுங்கையோடு / Bare)
13. "சும்மா" தான் இருக்கின்றோம்.
(சோம்பேறித்தனமாக / Lazily)
14. அவன் "சும்மா" ஏதாவது உளறுவான்.
(வெட்டியாக / Idle)
15. எல்லாமே "சும்மா" தான் சொன்னேன்.
(விளையாட்டிற்கு / Just for fun)

நாம் அன்றாடம் பயன்படுத்தும் இந்த "சும்மா" என்கிற ஒரு சொல், நாம் பயன்படுத்தும் இடத்திற்கு ஏற்றபடியும், தொடரும் சொற்களுக்கு ஏற்றபடியும் 15 விதமான அர்த்தங்களை, இங்கே கொடுக்கிறது என்றால், அது "சும்மா" இல்லை.

படித்ததில் பிடித்தது........

..........................................................................................................................................

## உங்கள் சிந்தனைக்கு...

1-மிகப்பெரிய நல்ல நாள் - இன்று
2-மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
3-மிகவும் வேண்டாதது - வெறுப்பு
4-கீழ்த்தரமான விடையம் - பொறாமை
5-நழுவ விடக்கூடாதது - வாய்ப்பு
6-உயர்வுக்கு வழி - உழைப்பு
7-செய்ய வேண்டியது - விவாதம்
8-செய்யக் கூடாதது - உபதேசம்

# நான் ஊரில் பார்த்து வியந்தவை....

(கலைவாணி. ஏகானந்தராஜா)

தாயகத்தில் எங்கு பார்த்தாலும் வரிசைதான் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. அதற்காக பலசரக்குக் கடைகளிலோ மரக்கறிக் கடைகளிலோ பழக்கடைகளிலோ எல்லாம் கூட்டம் அதிகமாக இருக்கும் வரிசை காணப்படும் என்று நினைக்காதீர்கள். இது தவறு. கியூ காணப்படுவது எல்லாம் எரிபொருள் விற்பனை நிலயங்கள் மட்டுமின்றி ஆடம்பர உணவுக்கடைகளிலும் ஐஸ்கிறீம் கடைகளிலும் மதுபானக்கடைகளிலும் தான். மாலை ஐந்து மணியானால் மதுபானக்கடைகளில் நீண்ட கியூ. இரவு ஏழு மணியானால் பிரசித்தமான விலை உயர்ந்த உணவுக் கடைகளின் முன் கியூ. ஐஸ்கிறீம் கடை சொல்லவே தேவையில்லை. எந்த நேரத்தில் சென்றாலும் கியூ தான்.

வீட்டில் பிறந்தநாளுக்காக ஓடர் கொடுத்து விட்டு காத்திருப்பவர்களும் 5.தொடக்கம் 10 நபர் குடும்பமாக வந்து ஐஸ்கிறீம் சாப்பிடுபவர்களும் அப்பப்பா எனக்கு தலை விறைத்தது. ஏன் தெரியுமா ? அவர்கள் சாப்பிட்ட ஐஸ்கிறீம் விலை ஒன்று 450 ரூபா. (நான் சாப்பிட்டது 250 ரூபா தான்) இதைவிட சந்தையில் மீன் விற்கும் வியாபாரியின் முன் சிலர் கூடி நின்று விலை கேட்பார்கள். ஆனால் மீன் வெட்டிக் கொடுப்பவரிடமோ நீண்ட கியூ. இப்போதெல்லாம் மீன் வாங்கி வெட்டிக்கொண்டு போனால் தான் வீட்டில் சமைத்துக் கொடுப்பார்கள். இல்லையேல் இது பூனைக்கும் நாய்க்கும் தான்.

அச்சுவேலியை அண்மித்த பகுதியில் ஒரு மரணவீடு. வழமையாக உற்ற உறவுகளும் அக்கம் பக்கத்திலும் இருப்பவர்கள் தான் ஏனொதானோ என்று தலையைக் காட்டிவிட்டு வருவார்கள். ஆனால் இந்த மரணவீட்டுக்கு சென்றவர் வீட்டுக்கு வந்து மற்றவரை அனுப்புகிறார் அவர் வந்தபின் மீண்டும் இவர் போகிறார். காலையில் ஊருக்குள் இருந்தவர்கள் போய் வந்து மற்றவர்களுக்கு தொலைபேசியில் செய்தி பரப்பியதால் அடுத்த கிராமங்களிலும் இருந்து வந்து ஒப்பாரி வைத்தனர். மரணவீட்டில் நிற்க இடமில்லாத கூட்டம். அப்படி என்னதான் நடந்தது என்று விசாரித்ததில் இந்த விடயம் தெரியவந்தது.

இறந்தவரின் பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களாம். மரணவீட்டிற்கு வந்த ஒவ்வொருவருக்கும் 5ஆயிரம் ருபா கொடுத்தனுப்பினார்களாம். ஒரு வீட்டில் இருவர் போனால் 10 ஆயிரம். இந்தக் காலத்தில் யார் விடுவார்கள்?

இதே போல ஒரு பிறந்தநாள் விழாவுக்கு போனவர்கள் வீட்டுக்கு வந்து வீட்டிலுள்ள பிள்ளைகளையும் வற்புறுத்தி கூட்டிப்போனார்கள். ஏன் இப்படி என்று விசாரித்ததில் வெளிநாட்டிலிருந்து வந்தவர் சிநேகிதர்களை அழைத்து (party) தண்ணிப்பாட்டி வைத்தாராம். மப்பு தலைக்கு ஏறியதில் வர்தவர்களுக்கெல்லாம் பணம் இறைத்தாராம். அடுத்தநாள் காலையில் வந்த செய்தி அவர்கள் அந்தந்த இடத்திலேயே தூங்கிவிட திருடர்கள் யாரோ வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களை எல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

அடுத்து ஒரு பூப்புனித நீராட்டு விழா. காலையிலேயே ஒலிபெருக்கியில் பாடல் ஒலித்தது. பக்கத்து வீடுகளில் இருப்பவர்கள் தங்கள் வீட்டுக்குள்ளேயே ஒருவருடன் ஒருவர் பேச முடியாத அளவு சத்தமாக பாட்டுப் போட்டிருந்தார்கள். அக்கம் பக்கம் இருப்பவர்களுக்கு மூன்று நேரமும் சாப்பாடு ஐயர் வந்து துடக்கு கழித்துவிட்டுப் போனாராம். ஐயர் படலை தாண்டமுன் பந்தி போடப்பட்டது. எல்லாம் மாமிசச் சாப்பாடு தான். மாமன்காறன் வெளிநாட்டியிருந்து வந்தாராம் அவருடைய ஏற்பாட்டில் தான் எல்லாம். இரவு 12 மணிவரை தண்ணிப்பாட்டியும் பாடல் ஆடல் கூத்துகள் நடைபெற்றன. மணவறை கட்டியவர்களும் கழட்டிப் போக வந்து நின்றனர். வீட்டிலுள்ள ஆண்களுக்கெல்லாம் நல்ல வெறி.

அடுத்தநாள் காலையில் எல்லோரும் கைத்தொலைபேசிகளை தேடி அலைந்தனர். ஒன்றா இரண்டா? எல்லாம் போய்விட்டது."வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அள்ளிக் கொண்டு போனது போல" வெளி நாடுகளில் இருந்து செல்பவர்கள் அங்கிருப்பவர்களையும் அளவுக்கு மிஞ்சி குடிக்கவைத்து தம் நிலை மறந்து விடுகின்றனர்:

வெளிநாடுகளிலிருந்து ஊருக்குச் செல்லும் ஒருசிலரது செய்கையால் பாதிக்கப்படுவது எமது மக்களே. தற்போது வாடகைக்கு வாகனம் ஓடுபவர்களுக்கு நல்ல கிராக்கி. "வாடகைக்கு வாகனம் வருமா" என்று கேட்டால் "கள்ளச்சந்தையில் கூடியவிலை கொடுத்து பெற்றோல் வாங்கி வைத்திருக்கிறேன் உங்களுக்கு கட்டுமானால் வருகிறேன்." என்று பதில் வரும். வெளிநாட்டிலிருந்து சென்றவர் தன் நாட்டுப் பணத்தில் கணக்குப் பார்ப்பார். "பறவாயில்லை கூடவே தருகிறேன்" என்று கொடுத்துவிடுவார். ஓட்டுனர் அந்த விலை நீடிப்பையே உள் நாட்டவரிடமும் அறவிடுகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு போக முப்பத்துஐயாயிரம் கேட்கிறார்கள். வெளிநாட்டவர் அகப்பட்டால் அந்த விலை இன்னமும் கூடும். இப்படி எத்தனை அநியாயங்கள் நம் நாட்டில். இன்றைய எமது தாயகத்தின் நிலமையை பார்த்து சிரிப்பதா அழுவதா என்று முழிக்கிறேன் நான்?...

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோ.. சினிமா தொடர்நாடகம் போல 1, 2, 3, 4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1,2,3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?.. கொண்டாட்டங்கள் வைப்போம்?.. கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ..தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!..ராசாத்திகள்!..

இனி கோடை வெய்யிலும் வந்து சிலருக்கு அலர்ஜி, வேறுசில வியாதிகள் வந்து வாட்டி எடுத்துப்போட்டுது.. இது ஒரு புறம் இப்ப புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் பலர் கொரோனா வந்து செத்தாலும் பறவாயில்லை எப்படியும் இந்தமுறை ஊருக்குப் போயே ஆகவேண்டும் என விடாப்பிடியாய் நின்று போய் வந்திட்டினம்.நாட்டில எவ்வளவு பிரச்சனை நடக்குது. கொரோனா பிரச்சனைகளையும் தாண்டி போய்வந்தது கெட்டித்தனம்தான் பாருங்கோ...

பலர் பழையபடி ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்டு, ஆடுவெட்டி, கோழி வெட்டி, ஊரெல்லாம் சுற்றித்திரிந்து, கோயில் குளம் எல்லாம் பார்த்து, கடற்கரையில் கிடந்து தண்ணியடித்து மகிழ்ந்துதான் வந்திருக்கினம். இதனால பாருங்கோ தாங்களும் கெட்டு அங்குள்ளவர்களையும் கெடுத்துவிட்டுத்தான் இந்தப் பணக்கார அகதிகள் திரும்பி வந்திருக்கிறார்கள். நோ...நோ...இப்ப இவர்கள் சிற்றிசன் எடுத்த இலங்கைத் (ட) தமிழர்கள்?..

ஊருக்குப் போய்வந்த இந்த தனவந்தத் தமிழர்கள் இங்கு திரும்பி வந்ததும் உடனடியாக பேஸ்புக் அது இது என எல்லாவற்றிலும் தங்கட விளையாட்டைக் காட்டியிருகினம் பாருங்கோ.. கிடந்தது எழும்பியது, குளித்தது, அரைகுறை உடுப்புகளோடு அலைந்தது, தங்கள் செல்லக் குஞ்சுகள் பிறமொழிகளில் பேசி வித்துவம் காட்டியது, ரெஸ்ரோரன்களில் சாப்பிட்டது, தண்ணியடித்தது, ஐஸ் குடித்தது இப்படிச் சொல்லமுடியாத படங்களை இதுகளில உலாவவிட்டு பல ஆயிரக்கணக்கானோரிடன் லைக் வேண்டி மகிழ்ந்ததுதான் தாங்கள் ஏதோ றோயல் பமிலி என்ற எண்ணம்தான். நடக்கட்டும் நல்லா நடந்தால் இந்த மயிலனைப்போல பலர் சந்தோஷப்படுவார்கள்?..

சரி..சரி.. என்ன கவலைகள் இருந்தாலும் இந்த மயிலனனுக்குச் சில சங்கதிகள் கிடைத்துக்கொண்டே இருக்குது பாருங்கோவன்..என்னோடு நேசறியில இருந்து உயர்வகுப்புவரை படித்தவன். அவன் இப்போ வயதுபோன தாத்தா..பிள்ளைகள் ஐந்தும் ஐந்து கண்டங்களிலும். நாட்டில் பல பிரச்சனைகள் நடைபெற்ற போது தன்னையும் ஐந்தையும் பெற்றெடுத்து வளர்த்த அந்தச் சீமாட்டி என்மனைவியையும் வெளிநாட்டுக்குப் பிள்ளை ஒருவன் கூப்பிட்டான்.

நானும் மனுசியும் உயிர் தப்பினால் போதும் என்று வெளிநாட்டுக்கு வந்தோம். இங்கு சில காலம் வாழ்ந்து பார்த்தோம் இங்கு நடக்கிற கூத்துகள் சொல்ல முடியாது அவ்வளவு அநியாயங்கள். களவு, பொய், சுத்துமாத்து, பொம்பிளைப்பிரச்சனை, சாதி சமயப் பிரச்சனை, சீதனப்பிரச்சனை, உடன்பிறப்புக்களிடையே பிரச்சனை, அந்தஸ்த்து கௌரவப் பிரச்சனை, சீட்டு வட்டிப் பிரச்சனை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இதைவிட உடன்பிறந்த சகோதரங்களுக்கிடையேயும் பெரும் பிரச்சனைதான். பணம்..பணம் என்று அலையும் பணப்பிசாசுகளால்தான் முழுப்பிரச்சனையும் பாருங்கோ..

என்ர வீட்டுப் பிள்ளைகளாலும் எனக்கும் மனைவிக்கும் நிம்மதி இல்லைப்பாருங்கோ..பிள்ளைகள் தங்கட சுயநலத்துக்காக எங்களை அங்கவா..இங்கவா..என்று நாடுநாடாக அலைக்களித்துவிட்டு இறுதியில் அப்பா-அம்மாவை தாங்கள் வைத்திருந்தால் பெரும் சுமை என கழட்டிவிடப்பார்க்குதுகள் பாருங்கோ. இந்தத் துன்பங்களைப் பொறுக்காத என்மனைவி சொன்னாள் வெளிங்கிடுங்கோ ஊருக்கு!...வெளிநாடுபோதும் என்று ஒற்றைக்காலில் நின்று..ஒருமாதிரி ஊருக்கு வந்து ஐந்து வருடமாக நிம்மதியாக வாழுகிறோம் என்றான்.

அப்போ என்னடா மச்சான்.. சுகமாய் இருக்கிறியோ?..என்று ஒரு நாள் ரெலிபோன் எடுத்தபோது அவன் தன்ர புராணத்தை நிறுத்தியதாக இல்லை. என்னடா என்று துளாவினேன்

இதென்னடா உன்ர கேள்வி.. இங்க அரசியல் குழப்பங்கள், ஊர்க் குழப்பங்கள், நாட்டு நிலைமைகளை எல்லாம் விளாசித்தள்ளினான். உன்ர மனைவி சுகநலம் எப்படி?.. உன்ர ஐந்து பிள்ளைகளும் வெளிநாடுகளில் இருக்குதுகள் உனக்கென்னடா குறை நீயும் மனைவியும் ராசாவும் ராசாத்தியும்தானடா என்றபோது அவனுக்குக் கோபம் வந்திட்டுது. கெட்டவார்த்தைகளால திட்டித்தீர்த்தான்.

பிள்ளைகளோ..ஐந்தாலையும் ஐந்து சதத்துக்குப் பிரயோசனம் இல்லை. அதுகள் ரெலிபோன் கதைப்பதும் இல்லை. ஏனடா என்றேன். கதைத்தால் காசு கேட்பம் என்று பிள்ளைகள் கதையை நிப்பாட்டிவிட்டினம் பாரும் என்றான். எனக்கும் கோபம் பொத்திக்கொண்டு வந்தது. அப்ப என்ன மச்சான் செலவுக்கு என்ன செயகிறாய் என்றேன். அவன் சொன்னான் பிள்ளைகள் ஒன்றும் சரிவராதுகள் மனைவியின்ர சீதன வயலை விற்று வங்கியில் போட்டுவிட்டு அதை அப்பப்போ எடுத்துச் சமாளிக்கின்றோம் என்றான்.

பிள்ளைகளின்ர இந்த அயோக்கியத்தனத்தால மச்சான் இப்ப குடிப்பழக்கமும் கூடிவிட்டுதுதடா என்றான். அப்ப போத்தலுக்கு என்ன செய்கிறாய் என்றேன். கிழமைக்கு ஒரு ஸ்பெசல் போத்தல் எடுப்பேன். அதோட சமாளித்துக்கொண்டு போறன் என்று கூறிவிட்டு எனக்கு ஏதும் அனுப்படா என்றான். அப்ப நான் கேட்டேன். எவ்வளவடா அனுப்பிறது என்றேன். அவன் ஒண்டு அனுப்படா என்றான்.

நான் நினைத்தேன் பத்தாயிரத்தைத்தான் சொல்லுகிறான் என்று பாருங்கோ..ஒண்டு என்றால் ஒரு லட்சமாம். எனக்குத் தலைவிறைத்தது. என்ன செய்வது சேமித்து வைத்திருந்த காசில அவனுக்கு ஒண்டை அனுப்பிப் போட்டு நான் இங்க பட்டினியும் கிடந்திருக்கிறன் பாருங்கோ..

இப்ப எனக்கும் ஏலாது மனைவிக்கும் ஏலாது வயதும் ஏறிக் கொண்டு போகின்றது. மனைவியால சமையலும் செய்யடியாது. ஒரு பெண்ணை வேலைக்குச் சேர்த்து சமையல் ,உடுப்புக் கழுவல், வீட்டு வேலைகள் எனச் செய்ய அவளுக்கும் மாதச் சம்பளம் சுளையாகக் கொடுக்க வேண்டும். இனி கோயில்காரார், பள்ளிக் கூடக்காரார், வாசிகசாலைக்காரர்அது இது என்று மாதாந்தம் காசுக்கு வருவினம். அவர்களுக்கும் கொடுக் கத்தானே வேண்டும் பாருங்கோ.. அவர்களின் நினைப்பு தவறில்லை ஐந்து பிள்ளைகளும் வெளிநாட்டில.. இவர்களிடம் பணம் கொட்டிக்கிடக்கும் என்று.

இறுதியாக அவன் சொன்னான் மச்சான் பிள்ளைகள் இறுதிக்காலத்தில் உன்னையும் மனைவியையும் பார்ப்பார்கள் என்று எதிர்பாராதே?.. உன் உழைப்பும் உன்சேமிப்பும் உன் சிக்கனமும்தான் உன் குடும்பத்தை கவனிக்கும். இதுதான் இன்றைய ஊர் நிலைமை.பணம் பணம் என்று அலையும் கூட்டம் மச்சான் என்றான் எனக்கோ தலைசுற்றியது...இது எல்லோருக்கும்தான் முடிவில்லாமல் தொடரும்.. அப்ப மயிலனின் தேடலும் தோடரும்!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| வி | டு | மு | றை |
| டு | கா | ம் | ல |
| க | க | ட | ல் |
| தை | ம் | கு | க |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போ | ரா | ட் | ட | ம் | ட | கு |
| த் | கொ | ள் | ளை | வ | த | த் |
| து | மு | ன் | வு | ண | உ | து |
| க் | ம் | த | த | ஆ | டு | வி |
| கே | பு | ம | க | டு | ட் | ள |
| ச | வ் | ன் | டை | ட் | ப | க் |
| ர் | ல | ம | ச | பா | க் | கு |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |

# நீரழிவை விரட்டும் முருங்கை...

நீரிழிவு இதய நோயினை அடித்து விரட்டும் ஒரே ஒரு பவுடர்! முழுவதும் வேர், பட்டை, இலைகள், பூ, காய்கள் என எல்லாமே ஆரோக்கிய நன்மை நிறைந்தது. இதன் நன்மைகளை உணர்ந்த நம் முன்னோர்கள் இதை சமையலில் பயன்படுத்தி வந்தார்கள்.

முருங்கையின் சத்துக்கள்

முருங்கைக் கீரையில், நார்ச்சத்து, இரும்புச் சத்து என நிறைய ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இதனை பொரியல், சாம்பார் என எந்த வகையில் சமைத்தாலும் சுவையாக இருப்பதோடு, நம் ஆரோக்கியத்தை பேணவும் உதவி செய்கிறது.

நமது உடலுக்கு தேவையான 20 அமினோ அமிலங்களில் 18 அமினோ அமிலங்கள் முருங்கைக் கீரையில் உள்ளன. அதோடு, மற்ற உணவுகளுடன் ஒப்பிடுகையில், முருங்கை இலையில் 25 மடங்கு அதிக இரும்புச் சத்து காணப்படுகிறது. எனவே இதனை தொடர்ந்து எடுத்துக் கொண்டு வந்தால், ரத்த சோகை முற்றிலும் நீங்கும். நீரிழிவு இதய நோயினை அடித்து விரட்டும் ஒரே ஒரு பவுடர்! வாழ்நாள் முழுவதும் நிம்மதி Drumstick Leaf Powder Benefits In Tamil

முருங்கை பவுடர்

முருங்கை கீரை தொடர்ந்து பயன்படுத்த முடியாதவர்கள், அதனை பவுடர் வடிவில் சேமித்து வைத்துக் கொண்டு பயன்படுத்துவது எளிதாக இருக்கும்.முருங்கை பவுடர் அல்லது பொடி என்பது முருங்கை மரத்தின் இலைகளை, அதாவது முருங்கை கீரையை உலர வைத்து தயாரிக்கப்படுகிறது. இந்த பொடியை கொண்டு நாம் எண்ணற்ற ஆரோக்கிய நன்மைகளை பெற முடியும்.





முருங்கை கீரை முருங்கை கஷாயத்தை காலையில் உட்கொள்வது அதிக நன்மை பயக்கும் என்று சொல்லலாம். இதைப் பயன்படுத்துவது உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், பற்களை வலுப்படுத்தும். நீரிழிவு இதய நோயினை அடித்து விரட்டும் ஒரே ஒரு பவுடர்! வாழ்நாள் முழுவதும் நிம்மதி.

முருங்கை கீரை கஷாயம்

முருங்கை இலை கஷாயம் தயாரிக்க முதலில் ஒரு பாத்திரத்தில் இரண்டு கப் தண்ணீரை சூடாக்கவும். இதன் பிறகு, தண்ணீர் கொதித்ததும் அதனுடன் முருங்கை இலைகளை அல்லது முருங்கை பொடியை சேர்த்து கொதிக்க விடவும்.

தண்ணீர் பாதியாக குறையும் வரை இந்த தண்ணீரை கொதிக்க வைக்கவும். அதன் பிறகு, கருப்பு மிளகு தூள் மற்றும் கருப்பு உப்பு சேர்க்கலாம். அதன் பிறகு வடிகட்டி குடிக்கலாம்.

முருங்கை கீரையில் உள்ல கால்சியம் எலும்புகள் மற்றும் பற்களை வலிமையாக்குவதுடன், எடையைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. முருங்கை இலைகள் இரத்தத்தை சுத்தப்படுத்தவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சர்க்கரை நோயாளிகளுக்கும், இதய நோயாளிகளுக்கும் இது வரப்பிரசாதம் எனலாம். நீரிழிவு இதய நோயினை அடித்து விரட்டும் ஒரே ஒரு பவுடர்! வாழ்நாள் முழுவதும் நிம்மதி ' Drumstick Leaf Powder Benefits In Tamil

---

## பெருஞ்சீரகம்!..

கொழுப்புகளைக் கட்டுப்படுத்தி உடல் எடையைக் குறைக்கும் பெருஞ்சீரக தண்ணீர்!உடலின் வளர்சிதை மாற்றத்தை சரிசெய்து, உடலில் உள்ள கலோரிகள் மற்றும் கொழுப்புகளைக் கட்டுப்படுத்தி உடல் எடையைக் குறைக்கும்.

ஈரல் நோயைக் குணப்படுத்த பெருஞ்சீரகம் ஒரு மருந்தாகப் பயன்படுகிறது. வயிற்றை சுற்றியுள்ள தேவையற்ற சதைப் பகுதி கரையும். தொப்பை கரைந்து சரியான உடல் அமைப்பை தரும்.

பெருஞ்சீரக தண்ணீர் இரத்தத்தில் உள்ள அதிகப்படியான யூரிக் அசிட்டுகளை வெளியேற்றி, இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.பெருஞ்சீரக தண்ணீர் குடித்து வந்தால், மூளை சுறுசுறுப்புடனும் புத்துணர்ச்சியுடனும் செயல்படும்.பெருஞ்சீரகத்தை சிறிதளவு எடுத்து வாயில் போட்டு மென்று சாப்பிட்டு, ஒரு கிளாஸ் வெந்நீர் பருகி வந்தால், ஜலதோஷ பிரச்சினை உடனே சரியாகிவிடும்.

# நெல்லி யூசில் இவ்வளவு நன்மைகளா?...



காலையில் வெறும் வயிற்றில் நெல்லி ஜூஸ் இவ்வளவு நன்மைகளா! காலையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காய் தண்ணீர் குடிப்பது நமது உடலுக்கு அதிக நன்மைகளை கொடுக்கும் நெல்லிக்காய் வைட்டமின் சி சத்து நிறைந்தது. தோல் ரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வாக இருக்கும்.

நெல்லிக்காய் தண்ணீரின் நன்மைகள்....
-சர்க்கரை நோயாளிகளுக்கு அதிக நன்மை தருகிறது.
-நெல்லிக்காயில் க்ரோமியம் இருப்பதால் சர்க்கரையை கட்டுபடுத்த உதவுகிறது.
-உடல் எடை குறைக்கவும் நெல்லிக்காய் தண்ணீர் உதவுகிறது.
-உடலில் உள்ள கொழுப்பை வேகமாக சக்தியாக மாற்ற உதவுகிறது.
-இதனால் நெல்லிக்காய் நீரை தொடர்ந்து குடித்து வந்தால் உடல் எடை குறையும் இதுபோலவே அஜீரணம் ஏற்படாமல் தடுக்கவும். நன்றாக உணவு செரிமாணமாகவும் உதவுகிறது.
-நெல்லிக்காயில் நாரச்சத்து உள்ளதால் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும்.




பகலில் சுறுசுறுப்பாக Active mode இல் இருக்கும் மூளையை, மாலையில் Passive modeக்கு மாற்றுங்கள். மாலை 6 மணிக்கு மேல் மூளையைத் தூண்டக்கூடிய டீ, கோப்பி போன்றவற்றை தவிருங்கள். புகை, மது எப்போதும் கூடவே கூடாது.

9 மணிக்குள் இரவு உணவை முடித்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு ஒரு டம்ளர் பால் அருந்தலாம். அதிகபட்சம் 11 மணிக்கு மேல் விழிக்காமல் இருப்பது நலம்.

மொபைல், தொலைக்காட்சி, லெப்டொப் போன்ற எலக்ட்ரோனிக் சாதனங்கள் தூக்கத்தின் விரோதிகள் என்பதை உணருங்கள். உங்கள் படுக்கை அறைக்குள் இவற்றை அனுமதிக்காதீர்கள்.

மூளையை அமைதிப்படுத்தி நல்ல தூக்கத்தில் விழ வைக்கும் திறன் கொண்டவை புத்தகங்கள். எனவே, தினமும் இரவில் புத்தகம் வாசியுங்கள். தூக்கம் வரும்... அறிவும் வளரும்...

மனதை வாட்டும் பிரச்சினை எதுவாக இருந்தாலும், தூங்கச் செல்லும் முன் மறந்துவிடுங்கள். நன்றாகத் தூங்கி தெம்பாக எழுந்தால், இந்த பிரச்சினையை தூள் தூளாக்கிவிடலாம் என்று நம்புங்கள்!

## அறிஞர்களை அறிந்து கொள்வோம்...
## படித்து முடித்தார்...

இந்தியப் பிரதமராகப் பதவி வகித்து புகழ்பெற்றவர்தான் பண்டித ஜவகர்லால் நேரு. அவர் பெரும் புத்தகப்பிரியர். நல்ல புத்தகங்கள் கையில் கிடைத்துவிட்டால் படித்து முடித்துவிடுவார். அவ்வளவுக்கு ஒரு புத்தகப் பிரியர். ஒரு முறை நேருவுக்கு ஒரு சிறந்த புத்தகம் கிடைத்தது. ஆனால் அதைப் படிக்க நேரமே இருக்கவில்லை. இதனால் அந்தப் புத்தகத்தை கையில் வைத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் மாலை தனது அலுவலக வேலைகளை முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது அந்தப் புத்தகமும் அவரோடுதான் இருந்தது. லிப்டில் கீழே இறங்கினார். அரைவாசி தூரத்தில் இயங்காது லிப்ட் நின்றுவிட்டது. உரியவர்களுக்குத் தகவல் எட்டியது. அதனை சரி செய்து இயக்க அதிக நேரமாகிவிட்டது.

அதன்பின்புதான் லிப்ட் கிழே இறங்கியது. நேரு வெளியே வந்தார்.. நேருவிடம் அதிகாரிகள் மன்னிப்புக் கேட்டார்கள். அப்போது நேரு சொன்னார்..."மன்னிப்பு எதற்கு" இந்தப் புத்தகத்தைப் படிக்க நேரமே கிடைக்கவில்லை. பழுதான லிப்ட் எனக்கு நேரத்தைத் தந்துவிட்டது. பழுதான லிப்டில் நின்றவாறே பத்தகத்தைப் படித்து முடித்துவிட்டென் என்றாராம்!...

**படித்துச் சுவைத்தவர்...**

**திருமதி ஜெயா நடேசன்**

.............................................................................................

**நெக்கட்டிவ் வார்த்தைகளுக்குப் பொசிட்டிவ் விளக்கம்...**

### FAIL

என்ற வார்த்தைக்கு "First Attempt in Liaring" அதாவது "கற்றுக் கொள்வதற்கான முதல் வாய்ப்பு" என்பது பொருளாகும்.

### END

என்பதற்கு "Effort Never Dies" அதாவது "முயற்சி ஒருபோதும் தோற்பதில்லை என்பது அதன் பொருளாகும்.

### No

என்ற வார்த்தைக்கு "Next Opportunity" அதாவது "அடுத்த வாய்ப்பு" என்பது அதன் பொருளாகும்.

# உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி - 2022

FIFA - Fußball Weltmeisterschaft 2022 in Katar




காலம்: 21. Nov. 2022 – 18. Dez. 2022
பங்குபற்றும் நாடுகள் : 32 விளையாட்டுகள் : 64
நடைபெறும் நாடு : Katar, மத்தியகிழக்குநாடான கட்டார்.
விளையாட்டரங்குகள் :

Khalifa International Stadium. Al-Bayt Stadium.
Al-Janoub Stadium. Education City Stadium.
Al-Rayyan Stadium. Al Thumama Stadium.
Doha Port Stadium. Lusail Iconic Stadium

உலகக்கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் முதன்முறையாக மத்தியகிழக்குஅரபு நாடான கட்டாரில் 2022 கார்த்திகை மார்கழி மாதங்களில் விமரிசையாக நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குபற்றும் நாடுகளின் விபரங்களைஇங்கே காணலாம். 8 குழுக்களாக நடைபெறும் இப்போட்டியில் எந்தநாடுவெற்றிபெறும் என்று பொறுத்திருந்து பார்ப்போம். இந்தப் போட்டிபற்றிய முழுவிபரங்களும் எமது அடுத்த இதழில் வெளியாகும்...

FIFA WORLD CUP Qatar 2022

| GROUP A | GROUP B | GROUP C | GROUP D |
|---|---|---|---|
| QATAR | ENGLAND | ARGENTINA | FRANCE |
| ECUADOR | IRAN | SAUDI ARABIA | AUSTRALIA |
| SENEGAL | UNITED STATES | MEXICO | DENMARK |
| NETHERLANDS | WALES | POLAND | TUNISIA |

| GROUP E | GROUP F | GROUP G | GROUP H |
|---|---|---|---|
| SPAIN | BELGIUM | BRAZIL | PORTUGAL |
| COSTA RICA | CANADA | SERBIA | GHANA |
| GERMANY | MOROCCO | SWITZERLAND | URUGUAY |
| JAPAN | CROATIA | CAMEROON | SOUTH KOREA |

# கொஞ்சம் சிரியுங்களேன்!..

-ஜெயா நடேசன்-

(1)கணவன்:- அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம் பணம் அனுப்பச்சொல்லி போன் பண்ணியிருக்கிறாங்க..
மனைவி:- கஞ்சி காய்ச்சிக் குடிக்கச் சொல்லுங்க..எல்லாம் சரியாகிவிடும்..
கணவன்:- இந்தா நீயே உன் அம்மாவிடம் சொல்லிவிடு?..

(2)குமார்:- நான் உனக்கு பத்து ரூபா தருகிறேன் உன் அக்கா என்னைப் பற்றி என்ன நினைக்கிறாள் எனக்கேட்டுவா..
ராகுல்:- இன்னொரு பத்து ரூபா தா என் அப்பா உன்னை என்ன செய்யப்போகிறார் என்று கேட்டு வருகிறேன்..

(3)மூன்று பெண்கள் ஆலயத்திற்குச் சென்றனர். அதில் இரு பெண்கள் பலத்த சத்தமாக இவ்வாறு வேண்டினார்கள்..
1வது பெண்:- கடவுளே எனக்குத் தங்க நகைகளுடன் ஒரு அறையைத் தா..
2வது பெண்:- கடவுளே எனக்கு வைரநகைகள் நிறைந்த ஒருஅறையைத் தா.
3வது பெண்:- கடவுளே தயவுசெய்து அந்த இரண்டு அறைச்சாவிகளையும் எனக்குத் தா!..

(4)நேர்ஸ்:- டாக்டர் இரண்டு தடவைகள் மயக்க ஊசி போட்டும் அவர் மயங்கி விழவில்லை?..
டாக்டர்:- ஊசியின் விலையைச் சொல்லுங்க அவர் உடனே மயங்கி விழுந்துவிடுவார்?..

(5)கோபு:- உங்க பையன் கோவிலுக்குள் போனா அதிகமாகப் பொய் பேசுகிறானே ஏன்?..
வேலன்:- கோவிலுக்குள் போனதும் அவன் மெய் மறந்து விடுவான்..

(6)திருடன்:- திருடுறதை அடியோடு விட்டுவிட்டேன் சேர்..
பொலிஸ்:- அப்படியானால் இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய்..
திருடன்.- திருடுவது எப்படி என்று "ஆன்லையினின்" பாடம் நடத்துகிறேன்..

(7)தேவா:- குதிரையின் கழுத்தில் பட்டாரி தொங்குதே ஏன்?..
சிவா:- E குதிரை (எலக்ரிக் குதிரை) என்று சொல்லி எவனோ ஒருவன் அதிக விலைக்கு மன்னனிடம் விற்றுவிட்டானாம்!..

# வாழ்வின் கடைசி அத்தியாயங்கள்...

எந்த நிலையிலும் உங்கள் வாழ்வின் கடைசி பகுதியில் உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ நினைக்காதீர்கள்! உங்கள் பேரக்குழந்தைகளின் மேல் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.. என்பதை மறக்கவேண்டாம்.குழந்தை வளர்ப்பில் மகனுக்கோ,மகளுக்கோ எவ்வித அறிவுரையும் சொல்லாதீர்கள். உங்கள் அறிவுரை மற்றும் அனுபவங்களை அவர்கள் மதிக்கமாட்டார்கள்.

விலகியே இருங்கள்..உறவுகள் இனிமையாக இருக்கும். என்பிள்ளை.. என் பிள்ளை என பதறாதீர்கள்.சிறகு முளைத்த பறவைகள் அவர்கள் என்பதை நினைத்து அமைதியா இருங்கள். பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை..சேமிப்பு மற்றும் உங்கள் சுய சம்பாத்திய சொத்துக்களை உயிருடன் இருக்கும்வரை யாருக்கும் பகிர வேண்டாம்!

காலம் முழுவதும் அவர்களுக்காக பாடுபட்டு,பல இழப்புகளை சந்தித்து இருப்பீர்கள்..அவற்றை சொல்லிக் காட்டவேண்டாம்.. உங்கள் கடமையை செய்தீர்கள் அவ்வளவே..!கூட்டுகுடும்ப வாழ்வு சிதைந்து போன தலைமுறையில் வாழ்கிறோம் என்பதை மறவாதீர்கள்..தேவைப்பட்டால் வருடம் ஒருமுறை சென்று,பேரன் பேத்திகளுடன் தங்கி வாருங்கள்..அங்கு அதிகம் நாள் தங்க வேண்டாம்!

எந்த நேரத்திலும்,உங்கள் மனைவியை,கணவனை மருமகள் முன் விட்டுக் கொடுத்து பேசாதீர்கள்.! அவர்களின் ஆடம்பர வாழ்வை விமர்சிக்க வேண்டாம்..சேமிப்பின் அவசியம் பற்றி சொல்லி அவமானப்பட வேண்டாம்.

அவர்கள் வாழ்வது உங்கள் வாழ்வைப்போல போராட்ட வாழ்வு இல்லை..நவீன கார்ப்பரேட் வாழ்க்கை. நீங்கள் 1000ரூ பெரிதாய் நினைத்தவர்கள்..அவர்கள் லட்சங்களை புரட்டி பார்ப்பவர்கள்.. எனவே சூரியனுக்கு டார்ச் அடிக்காதீர்கள்! அதிக பாசம் ஆசை வைத்தால் அது மோசம்..அவர்கள் குழந்தையை அவர்கள் கவனித்து கொள்வார்கள். உங்கள் அறிவுரையை தவிருங்கள்.! உங்களைவிட அறிவிலும்,திறமையிலும் அவர்கள் சிறந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்!!

படித்தேன் பகிர்கிறேன்!




# "சோவியத் யூனியன்' கொர்பச்சோவ் காலமானார்...

சோவியத் யூனியனின் (USSR) கடைசி அதிபர் மிக்கைல் கொர்பச்சோவ் (வயது 91) காலமானார்.
ரஷ்யா உள்ளிட்ட நாடுகளை உள்ளடக்கிய 1991 வரையிலான சோவியத் யூனியனின் அதிபர் கொர்பச்சோவ்.இவரின் பெரெஸ்த்ரோயிக்கா முக்கியமானது. 1985- 1991வரை சோவியத் யூனியன் அதிபராக இருந்தார்.

மிக்கைல் செர்கேவிச் கொர்பச்சோவ் (ஆமையடை Sergeyevich Gorbachev[e] ( பிறப்பு 2-3-1931 இறப்பு 30-8-2022) இவர் சோவியத் ஒன்றியத்தின் 8-ஆவது, கடைசி அதிபர். 1985 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவியில் இருந்தார். 1988 முதல் 1989 வரை சுப்ரீம் சோவியத் தலைமைப் பீடத்தின் தலைவராகவும், 1989 முதல் 1990 வரை சுப்ரீம் சோவியத்தின் தலைவராகவும் பதவியில் இருந்தார்.

கருத்தியல் ரீதியாக, கொர்பச்சோவ் தொடக்கத்தில் மார்க்சியம்-லெனினிசக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும், பின்னர் 1990களின் முற்பகுதியில் சமூக ஜனநாயகத்தை நோக்கிச் சென்றார். இவரது சில சீர்திருத்தக் கொள்கைகள் பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தன. இவருக்கு 1990இல் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

கொர்பச்சோவ், ருசியாவில் இசுத்தாவ்ரப்போல் பிரிவில் பிரிவல்னோயே என்ற நகரில் ருசிய, உக்ரைனிய ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இசுத்தாலினின் ஆட்சியில் தனது இளமைப் பருவத்தில் பொதுவுடைமைக் கட்சியில் சேருவதற்கு முன்பு ஒரு கூட்டுப் பண்ணையில் கூட்டு அறுவடை இயந்திரங்களை இயக்கும் பணியில் ஈடுபட்டார். மாஸ்கோ அரசுப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, அவர் 1955 இல் சட்டப் பட்டம் பெறுவதற்கு முன்பு 1953 இல் சக மாணவியான ரைசா தைத்தாரென்கோவை மணந்தார்.

இசுத்தாவ்ரப்போலுக்குச் சென்ற அவர், கொம்சோமால் இளைஞர் அமைப்பில் பணியாற்றினார். 1953 இல் இசுத்தாலினின் இறப்பிற்குப் பிறகு, சோவியத் தலைவர் நிக்கித்தா குருச்சேவின் இசுத்தாலினியத்திற்கு எதிரான சீர்திருத்தங்களுக்குத் தீவிர ஆதரவாளரானார். 1970 இல் இசுத்தாவ்ரப்போல் பிராந்தியக் குழுவின் கட்சியின் முதல் செயலாளராக நியமிக்கப்பட்டார். அந்தப் பதவியில், அவர் இசுத்தாவ்ரப்போல் கால்வாயின் கட்டுமானத்தை பணியை மேற்பார்வையிட்டார்.

1978 இல், அவர் கட்சியின் மத்தியக் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டு மாஸ்கோ சென்றார். 1979 இல் கட்சியின் ஆளும் பொலிட்பியூரோவில் சேர்ந்தார். சோவியத் தலைவர் லியோனீது பிரெசுனேவ் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள், யூரி ஆந்திரோப்போவ், கான்சுடான்டின் செர்னென்கோ ஆகிய தலைவர்களின் சுருக்கமான ஆட்சியைத் தொடர்ந்து, பொலிட்பியூரோ 1985 இல் கொர்பச்சோவை கட்சியின் பொதுச் செயலாளராகவும், அரசுத்தலைவராகவும் தேர்ந்தெடுத்தது.

சோவியத் அரசையும் அதன் சோசலிசக் கொள்கைகளையும் பாதுகாப்பதில் உறுதியாக இருந்த போதிலும், குறிப்பாக 1986 செர்னோபில் பேரழிவிற்குப் பிறகு குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் அவசியம் என்று கோர்பச்சோவ் நம்பினார். சோவியத்-ஆப்கான் போரில் இருந்து விலகி, அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தவும், பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவரவும் அமெரிக்க அதிபர் ரீகனுடன் உச்சிமாநாட்டில் கலந்து கொண்டார்.

உள்நாட்டில், கிளாஸ்னோஸ்த் ("திறந்த தன்மை") என்ற அவரது கொள்கையானது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றை மேம்படுத்த அனுமதித்தது. அதே நேரத்தில் அவரது பெரெஸ்த்ரோயிக்கா ("மறுசீரமைப்பு") கொள்கை அதிகாரப் பரவலாக்கல் மூலம் பொருளாதார முடிவெடுத்து செயல்திறனை மேம்படுத்த முயன்றது. அவரது ஜனநாயகமயமாக்கல் நடவடிக்கைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் காங்கிரசின் உருவாக்கம் ஆகியவை ஒரு கட்சி அரசுக்கு சவாலாக அமைந்தது.

1989-1990-இல் பல்வேறு கிழக்கு ஐரோப்பிய சோவியத் உறுப்பு நாடுகள் மார்க்சிய-லெனினிய ஆட்சியைக் கைவிட்டபோது கொர்பச்சோவ் இராணுவ ரீதியாக தலையிட மறுத்துவிட்டார். உள்நாட்டில், வளர்ந்து வந்த தேசியவாத உணர்வு சோவியத் ஒன்றியத்தை உடைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. மார்க்சிய-லெனினியக் கடும்போக்குவாதிகள் 1991 ஆகஸ்ட் மாதத்தில் கோர்பச்சேவுக்கு எதிராக நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு சதி தோல்வியுற்றது. இதைத் தொடர்ந்து, கொர்பச்சோவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் ஒன்றியம் கலைந்ததை அடுத்து அவர் தனது பதவியைத் துறந்தார்.

பதவியை விட்டு வெளியேறிய பிறகு, அவர் தனது கொர்பச்சோவ் அறக்கட்டளையைத் தொடங்கினார், ருசிய அரசுத்தலைவர்கள் போரிஸ் யெல்ட்சின், விளாதிமிர் பூட்டின் ஆகியோரக் கடுமையாக விமர்சித்தார். மேலும் ருசியாவின் சமூக-ஜனநாயக இயக்கத்திற்காக பிரச்சாரம் செய்தார். இவர் நேற்று (30-8-2022) மாஸ்கோவில் கடுமையான மற்றும் நீடித்த நோயால்" இறந்தார்.

20-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஆளுமைகளில் ஒருவராகப் பரவலாகக் கருதப்பட்ட கொர்பச்சோவ் தொடர்ந்து சர்ச்சைக்குரியவராகக் காணப்பட்டார். அமைதிக்கான நோபல் பரிசு உட்படப் பலதரப்பட்ட விருதுகளைப் பெற்ற இவர், பனிப்போரைமுடிவுக்குக் கொண்டுவந்ததிலும், சோவியத் ஒன்றியத்தில் புதிய அரசியல், பொருளாதார சுதந்திரங்களை அறிமுகப்படுத்தியதிலும், கிழக்கு ஐரோப்பா, மத்திய ஆசியாவில் மார்க்சிய-லெனினிய நிர்வாகங்களின் வீழ்ச்சியை சகித்துக்கொள்வதிலும் ஜெர்மானிய மீளிணைவிலும் அவர் முக்கியப் பங்காற்றியதற்காகப் பரவலாகப் பாராட்டப்பட்டார். ஆனால் சோவியத் கலைப்பை விரைவுபடுத்தியதற்காகவும், இந்த நிகழ்வால் ருசியாவின் உலகளாவிய செல்வாக்கில் சரிவைக் கொண்டு வந்து பொருளாதார சரிவைத் தூண்டியமைக்காகவும் ருசியாவிலும் முன்னாள் சோவியத் நாடுகளிலும் இவர் அடிக்கடி விமரிசிக்கப்பட்டு வந்தார். இன்றைய புட்டின் வரை இவர் காட்டிய வழியில் ருசிய ஆட்சி நடத்துகின்றனர்.

........................................................................................................................

## இலங்கை பற்றிச் சில...

01-இலங்கையில் மாகாணங்கள் - 9
02-இலங்கையில் மாவட்டங்கள் - 25
03-இலங்கையில் தேர்தல் மாவட்டங்கள் - 22
04-இலங்கையில் அதிகமாவட்டங்கள் உள்ள மாகாணம் - வடமாகாணம்
05-இலங்கையில் நிலப்பரப்பில் பெரிய மாவட்டம் - அநுராதபுரம்
06-இலங்கையில் நிலப்பரப்பில் குறைந்த மாவட்டம் - கொழும்பு
07-இலங்கையில் சனத்தொகையில் கூடிய மாவட்டம் - கொழும்பு
08-இலங்கையில் சனத்தொகையில் குறைந்த மாவட்டம் - முல்லைத்தீவு
09-இலங்கையில் வறட்சி கூடிய மாவட்டம் - மன்னார்
10-இலங்கையில் இஸ்லாமியர்கள் கூடுதலாக வாழும் மவாட்டம்-அம்பாறை



# அஞ்சலிக்கின்றோம்!...
## அமரர் டேவிட் ஸ்ரான்லி - யேர்மனி
## 23.12.1953 - 07.09.2022

யேர்மனியில் வாழ்ந்துவந்த டேவிட் ஸ்ரான்லி அவர்கள் இறைபதம் அடைந்த துயரச்செய்தி அறிந்து பெரும் கவலைகொண்டோம். அன்னார் எமது சஞ்சிகையில் வெள்ளிவிழாக்கண்டு எழுதிவரும் கெங்கா அவர்களின் அன்புக் கணவராவர். ஒரே ஒரு ஆண்பிள்ளையின் தந்தையான இவர் நல்ல பண்பானவர், கல்விமான். அமைதியாக இருந்து பல பொது வேலைத்திட்டங்களில் செயற்படும் வல்லவர் என்றே கூறலாம்.

கடந்த முப்பது வருடங்களாக எமது சஞ்சிகையால் எடுக்கப்பட்ட அத்தனை விழாக்களிலும் கலந்து கொண்டதுடன் பல்வேறு உதவிகளையும் செய்துவந்துள்ளார். தன் அன்பு மனைவிமீது அதீத அக்கறை கொண்டு இயங்கி வந்தார். மனைவியாரின் எழுத்து, இலக்கியப் பணிகள் சிறந்து வளர இவரே அச்சாணியாக இருந்து செயற்பட்டவர். எல்லோரையும் எங்கு கண்டாலும் இன்முகத்துடன் கதைத்துப் பேசி மகிழ்வுறும் நண்பர் டேவிட்டின் இழப்பானது நமக்கெல்லாம் பேரிடியாகவே அமைந்தன.

பிறப்பும் இறப்பும் இந்த உலகின் நியதியே. அந்தவகையில் எமது அன்பு வாசகரின் இழப்பானது எமக்கெல்லாம் பேரிழப்பாகவே கருதுகின்றோம். அன்னாரின் துணைவி கெங்கா அவர் மகன் மருமகள் பேரப்பிள்ளை உற்றார் உறவுகள் நட்புக்களுக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல ஆண்டவர்களை வேண்டுகின்றோம்!..

63ம் பக்கத் தொடர்ச்சி...

## எலிசபெத் ராணியின் வாழ்க்கைப் பயணம்...

-1940 முதன் முதலாக பி.பி.சி றேடியோவில் உரையாற்றினார். அப்போது 2ம் உலகப்போரின் வீரர்கள் தைரியத்துடன் போரிட வேண்டும் எனப் பேசினார்.

-1942 2ம் உலகப்போரின்போது வின்ஸ்டர் அரண்மனையில் தன் சகோதரியுடன் நாடகங்கள் நடித்து அதன்மூலம் போரைப் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

-1942 இராணுவத்தில் இணைந்து படைக்கலப் பிரிவில் வாகனங்கள் இயக்கவும் பழுதுபார்த்துச் சரிசெய்யும் முறைகளைக் கற்றுக்கொண்டார்.-1945 2ம் உலகப்பேரின் நிறைவுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

-1947 இராணுவ அதிகாரியான பிலிப்பை திருமணம் செய்தார்.-1952 பெப்ரவரி 6 தனது 25 வயதில் ராணியாகத் தெரிவானார். -1953 யூன் 2 பிரித்தானிய ராணியாக முடிசூடினார்.-1957 ராணியின் முதல் கிறிஸ்மஸ் செய்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.-1957 உலகின் மிகப்பெரிய அணுசக்தி நிலையத்தை லண்டன் கால்டர் ஹோலில் தொடக்கி வைத்தார்.

-1973 அவுஸ்திரேலியப் பயணத்தின் போது புகழ்பெற்ற சிட்னி ஓப்ரா ஹவுசை திறந்து வைத்தார்.-1976 இராணுவம் சம்பந்தமான தகவல்களை முதன் முதலில் மின்னஞ்சல் (E.Mail) மூலம் அனுப்பினார்.


-1981 தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிர் தப்பினார்.-1983 இரண்டாவது முறையாக இந்தியா சென்றபோது அன்னை திரேசாவைச் சந்தித்து உரையாடி வாழ்த்திப் பரிசுகள் வழங்கினார்.-1986 பிரித்தானிய அரச குடும்பத்திலிருந்து முதன் முதலாக சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.-1991 அமெரிக்கப் பாராளுமன்றில் விசேட உரையாற்றினார்.

**சிறப்புக்களில் சில...**

-அமெரிக்க ஜனாதிபதிகளாக இருந்த 13 ஜனாதிபதிகளை சந்தித்து உரையாடியுள்ளார்.-52 நாடுகளைக் கொண்ட கொமன் வெல்த் நாடுகளின் தலைவியா மிக நீண்ட காலம் பதவி வகித்திருக்கிறார்.-பிரித்தானில வரலாற்றில் அதிகூடிய காலம் (70 ஆண்டுகள் 214 நாட்கள்) ராணியாக இருந்து சாதனை படைத்திருக்கிறார்.-உலகின் ஆகக்கூடுதலான நாடுகளை தமது ஆட்சியில் வைத்திருந்து பெருமை சேர்த்திருக்கிறார்.-600 மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் தலைவராகவும் செயற்பட்டிருக்கிறார்.

இவர் நாட்டின் மகாராணி மட்டுமல்லாமல் 4 பிள்ளைகள், 8 பேரப்பிள்ளைகள் 12 கொள்ளுப் பேரப்பிள்ளைகளோடு ஒரு குடும்பத்தின் தலைவியாகவும் அன்பாகவும் பண்பாகவும் வாழ்திருக்கிறார். இவர் பிரித்தானியாவின் மகாராணியாகவும் பிரித்தானியாவின் தாயாகவும் வாழ்ந்து முடித்திருக்கிறார் என்பது சிறப்பான விடையமாகும்...உலகிலுள்ள ராணிகளில் மரியாதைக்குரிய ராணியாகத் திகழ்ந்த மகாராணிக்கு எமது அஞ்சலிகள்!..

# கைலாயர் செல்லனையார் சிவகுமாரன்
## 01.10.1936 - 15.09.2022




இயற்கை எய்திய இலங்கையின் சிறந்த தமிழ், ஆங்கில மொழி விற்பன்னர், இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர், பத்திரிகைகள் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் பணியாற்றிய பெருமை பெற்றவர். இறுதி மூச்சுவரை தமிழையும் தமிழரையும் நேசித்த மாபெரும் ஆளுமை சாகித்ய ரத்னா கே. எஸ். சிவகுமாரன் அவர்களுக்கு கனத்த அஞ்சலிகள்.

வானொலிக் குடும்பத்தின் மூத்த சகோதரன் கே.எஸ். சிவகுமாரன் அவர்களது மறைவுச் செய்தி துயரத்தைத் தந்துள்ளது. 1966 முதல் வர்த்தக ஒலிபரப்பில் அறிவிப்பாளராக இணைந்தவர். தனக்குப் பின்னே வந்த இளைய தலைமுறை அறிவிப்பாளர்களை வாழ்த்தி வரவேற்ற பண்பாளர். தமிழில் மட்டுமன்றி ஆங்கில சேவையிலும் அறிவிப்பாளராகப் பணிபுரிந்த முதல் சாதனையாளர். சிறிது காலம் வானொலி நிலையத்தின் செய்திப் பிரிவிலும் ஒரு செய்தி ஆசிரியராகப் பங்களிப்பினை நல்கியவர். கல்வித் துறையில் ஒரு நல்லாசிரியராகவும், இலக்கியத்துறையில் பல படைப்புகளைத் தந்து, ஒரு சிறந்த திறனாய்வாளராகவும் முத்திரை பதித்து 2020ஆம் ஆண்டுக்கான “சாஹித்ய ரத்ன“ விருது பெற்ற பெருமைக்கும் உரியவர். இளைய தலைமுறையின் திறமைகளை அங்கீகரித்து, மனமாரப் பாராட்டும் நல்ல மனிதர்.

பத்திரிகையாளர்,ஒலிபரப்பாளர், எழுத்தாளருமான கே.எஸ். சிவகுமாரன் அவர்களின் மறைவானது ஜீரணிக்கமுடியாதது! இட்டு நிரப்ப இயலாதது! இந்தப்பூவுலகை விட்டு நீங்கிவிட்டீர்களாம். நல்ல உள்ளங்களின் பிரிவு தான் மனதை வாட்டி வதைக்கும்.உங்கள் இழப்பும் துயரைத்தருகிறது. முகநூலில் நல்ல நண்பராக இருந்தீர்கள்.நலம் விசாரித்தீர்கள். ஆறுதல் படுத்தினீர்கள்.அவசர உலகம். சடுதியாக விடைபெற்று விட்டீர்கள். நெஞ்சம் கனக்கிறது. ஆத்மா இளைப்பாற பிரார்த்தனைகள்!..

# யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்...

-தொகுப்பு:- சாந்தினி துரையரங்கன்-

## யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 15



**சந்திரகௌரி சிவபாலன்.**

ஜெர்மனியில் கௌசி என்னும் புனைபெயரில் எழுதிவரும் எழுத்தாளர்.

இலங்கையில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் பிறந்த இவர், ஜேர்மனியில் 1996 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வருகின்றார். இவர் மட்டக்களப்பு ஏறாவூர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, அதன்பின் 7 ஆம் வகுப்பில் இருந்து மட்/வின்சென்ட் மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றார். அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றார். அதன்பின் நுகேகொடா திறந்த பல்கலைக்கழகத்தில் கற்று கல்வியியல் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். இலங்கையில் ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் கடமை புரிந்த அனுபவங்கள் இவரிடம் உண்டு.

இலங்கையில் தினகரன் பத்திரிகையில் இவருடைய முதல் கட்டுரை வெளிவந்தது. அதிலே தனது எழுத்துப் பணி தொடங்கியது என்கின்றார். இவர் இலங்கையில் பத்திரிகையில் எழுதியிருந்தாலும் தற்போது போல் எழுத்தை முழுநேரமாக செய்யவில்லை. மாணவர்கள் முன்னேற்றம் என்னும் ஒரே நோக்கத்துடன் அவர்களுக்காகவே கூடுதலான பொழுதுகளை செலவு செய்தார்.

ஜேர்மனி வந்த பின் இவருடைய எழுத்தாற்றல் மேலும் வளரக் கூடியதாக இருந்தது. இலண்டன் தமிழ் வானொலியில் தொடர்ச்சியாக கவிதை, கட்டுரை, இலக்கியங்கள் என்று தொடர்ந்து எழுதி வந்தார்.

அவ்வானொலியில் ஓடிவிளையாடு பாப்பா என்னும் ஒரு நிகழ்ச்சியை 3 வருடங்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்தார். அதன்பின் வேலைக்குச் சென்று வருவதனால், தொடர்ந்து இந்நிகழ்ச்சியைச் செய்ய முடியாத நிலை இவருக்கு ஏற்பட்டுள்ளது என்கின்றார்.

கௌசி என்னும் பெயரிலேயே இவருடைய படைப்புக்கள் வெளிவருகின்ற காரணத்தினால் எழுத்துலகிலே கௌசி என்னும்பெயரிலேயே அடையாளப்படுத்தப்படுகின்றார். ஜெர்மனி மொழியிலே வேதனத் தொழிலாக வயதான டிமென்ஷியா நோயாளிகளுக்கான பயிற்சி அளித்து வருகின்றார். யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும் யேர்மனி தமிழ் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினராகவும் தொழிற்பட்டுள்ளார்.

தற்போது உலகத்தின் பல பகுதிகளில் இருக்கின்ற மதுரை தமிழ்சங்கம், உலகத் தமிழ் சங்கம் போன்ற தமிழ் சங்கங்களிலும், இந்தியக் கல்லூரிகளிலும் உரையாற்றி வருகின்றார். பிரான்சில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை வாசித்துள்ளார். வள்ளலார் அறக்கட்டளை நிறுவனத்திலே ஆன்மீகம் கற்று பிரம்ம ஞானி என்னும் பட்டத்தைப் பெற்றுள்ளார். தற்போது ஆன்மீக சொற்பொழிவுகளையும் ஆற்றி வருகின்றார்.

தமிழ் வான் அவை என்னும் அமைப்பின் பெயரிலே இணையவழிப் பன்னாட்டு இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சியினை 2020 ஆம் ஆண்டில் இருந்து நடத்தி வருகின்றார். அதில் மறைந்த எழுத்தாளர்களை நினைவுறுத்துதல், இலக்கிய நிகழ்வுகளை நடத்துவதுடன் உரையாளர்களை உலகம் தழுவிய ரீதியில் அழைத்து உரையாற்ற வைக்கின்றார். கலைஞர்களை நிகழ்ச்சிகள் நடத்திக் கௌரவிக்கின்றார்.

இவர் இதுவரை 4 நூல்களளை வெளியிட்டுள்ளார்.

1.என்னையே நானறியேன் என்னும் நாவல்.

2.முக்கோணமுக்குளிப்பு என்னும் கட்டுரைத் தொகுப்பு,

3.வெள்ளை உடைக்குள் கரையும் பருவம் என்னும் சிறுகதைத் தொகுப்பு.

4.நான் பேசும் இலக்கியம் என்னும் ஒரு கட்டுரைத் தொகுப்பு. என்பன அவையாகும்.


மனஓசை என்னும் கவிதைத் தொகுப்பு இவ்வருடம் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஜெர்மனி, அவுஸ்திரேலியா, கனடா, போன்ற நாடுகளின் சஞ்சிகைகளிலும், இலங்கைப் பத்திரிகைகளிலும், வெற்றிமணி பத்திரிகையிலும் இவருடைய படைப்புக்கள் வெளிவருகின்றன.

http://kowsy2010.blogspot.com என்னும் வலையிலும், வல்லமை.கொம் என்னும் இணையத்தளத்திலும் இன்னும் சில இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். முகநூலிலும் இவருடைய கருத்துக்கள் பதிவாகின்றன.

ilakkiya maalai என்னும் youtube Channel ஒன்றையும் நடத்தி வருகின்றார். இதில் இலக்கிய சம்பந்தமான காணொளிகள் இடம்பெறுகின்றன. எழுதுவது, உரையாற்றுவதும் இலக்கியச் சந்திப்புக்களை நடத்துவதும் போன்றன இவருடைய தணியாத தாகங்கள் .

Chandragowry Sivapalan (Kowsy)
Felder Str – 56
42651 Solingen

.................................................................................................................................



**யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 16**

| | | |
|---|---|---|
| பெயர் | - | கவி மீனா சிவலிங்கம் |
| பிறப்பு | - | கொழும்பு , 01.09.1954 |
| வாழ்ந்த இடம் | - | யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி |
| தந்தை, தாய் | - | நடராஜா, மனோன்மணி |
| கல்வி | - | ஆரம்பக்கல்வி -ஆனைப்பந்தி மெதடிஸ் |
| | | உயர்தரம் - யாழ் வேம்படி மகளீர் கல்லூரி |
| திருமணம் | - | 1977 |
| பிள்ளைகள் | - | இரண்டு ஆண்பிள்ளைகள். |
| தற்போதைய வாழ்விடம் | - | Hennef ,Germany |
| படைப்புகள் | - | கவிதை, சிறுகதை, கட்டுரை |

உயர்தர கல்வியை கற்ற பின் வெளிவாரிபட்டப்படிப்பை தொடர்ந்தார். மேலும் தட்டச்சு,சுருக்கெழுத்து,ஆங்கிலம் போன்றவற்றையும் திறம்படக்கற்றார். ஆங்கில ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்து மன்னாரில் ஆசிரியர் வேலை வாய்ப்பு கிடைத்தும் குடும்ப சூழ்நிலையால் அதனை தவிர்த்துக்கொண்டார்.

1985ம் ஆண்டு யேர்மனிக்கு புலம்பெயர்ந்த பின் ஆரம்ப காலங்களில் நூல்கள் வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் ஆர்வத்தினால் வானொலிகள், சஞ்சிகைகளில் தன் படைப்புக்களை எழுதி வெளிப்படுத்தினார். TBC வானொலி , லண்டன் தமிழ் வானொலிகளில், ரி.ஆ.ரி வானொலிஎன தன்

படைப்பாற்றலையும், நிகழ்ச்சிகளையும் செய்து வந்துள்ளார். 15ஆண்டுகளாக இலக்கியநேரம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றிச் திறம்படச் செய்து வந்துள்ளார். இவரது பாடல்கள் திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்களால் இசையமைத்துப் பாடி இசைத்தட்டில் வெளியாகி வந்துள்ளமையும் குறிப்பிடதக்கதாகும். ராஜகருணா அவர்கள் வெளியிட்ட பிள்ளைத்தமிழ் இசைதட்டிலும் இவரது பாடலும் இசையமைத்து வெளிவந்துள்ளது.

மண், பூவரசு, தமிழ்நாதம் சஞ்சிகைகளில் இவரது படைப்புகள் பல வெளிவந்துள்ளன. மண் சஞ்சிகையில் தற்போதும் தொடர்ந்து எழுதிவருகின்றார்.

.....................................................................................................................................

## வாழ்க்கைக்கு நிம்மதி தரும் மந்திரங்கள்..

உங்களைக் கோபப்படுத்தும்போது மௌனமாய் இருங்கள்

விலக்கி வைக்கும்போது சற்று விலகியே இருங்கள்

பெருமைப் படுத்தும்போது துள்ளி எழாது இருங்கள்

ஊதாசீனப் படுத்தும்போது உடைந்துவிடாமல் இருங்கள்

அவமானப் படுத்தும்போது தவறியும் அழாமல் இருங்கள்

தோல்வி அடையும்போது துணிந்து எழுந்து இருங்கள்

வெற்றி பெறும்போது பணிந்து இருங்கள்

காயப் படுத்தும்போது கண்டும் காணமல் இருங்கள்

.....................................................................................................................................

**பொன்மொழிகள்..**

1-வேகமாக முடிவெடுப்பதைவிட விவேகமாக முடிவு செய்ய வேண்டும்.

2-பல துறைகளில் அறிவு இருப்பது கிடைத்தற்கரிய செல்வமாகும்.

3-தன் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன் அறிவாளி.

மண் சஞ்சிகையால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பல பரிசில்கள் பெற்ற பெருமையும் இவரது எழுத்துகளுக்கு உண்டு.இவர் எழுதிய சில பாடல்கள், கவிதை, கட்டுரை ,சிறுகதைகள் என்பன இவரது அனுமதியுடன் ஒரு சிலரது முயற்சியால் அவர்களுடைய தொகுப்பில் புத்தகமாகவும் இறுவெட்டாகவும் வெளியாகியதுமுண்டு

யேர்மனி-கென்னெவ் தமிழாலயத்தில் நான்கு ஆண்டுகள் கற்பித்த அனுபவத்தையும் இவர் உடையவர்.இணைய தொழில்நுட்பங்களை கற்று தற்காலத்திற்கு ஏற்றால் போல் https://Issuu.com/Kavi.meena/docs என்னும் இணையப் பக்கத்தை உருவாக்கி கவிதை பூக்கள் என்னும் பெயரில் ஒரு மின் சஞ்சிகை நடாத்தி வருகிறார். இதில் ஏழுக்கு மேற்பட்ட எழுத்தாளாகள் தங்களது ஆக்கங்களை கவிதை பூக்களில் இணைந்து சிறப்பிக்கிறார்கள். 38வது கவிதை பூக்கள் வெளியாக உள்ளது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இந்த மின் நூல் இலவச வெளியீடாக இணையத்தில் வலம் வருகிறது.

மேலும் இவரது தனிபட்ட கவிதை தொகுப்பு 3, கட்டுரை தொகுப்பு 2, சிறுகதை தொகுப்பு 2, சமையல் பாகம் 1 என இதுவரை 49 மின்நூல்கள் இணையயத்தில் வெளியாகி உள்ளன. கவிதை, கட்டுரை, சிறுகதைகளை என்பவற்றை htt://meenatamilmuttam.blogspot.com/2018/ இவரது இணையத்திலும் பார்க்கலாம்.ஜேர்மன் நாட்டையும் டொச் மொழியையும் நேசிப்பதால் டொச் மொழியையும் பேசவும் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். இதனால் வேலை செய்ய கூடியதாகவும் நல்ல படித்த ஜேர்மனிய நண்பர்கள் கிடைக்கவும் வாய்ப்பு கிடைத்தது என்கின்றார்.இவரது பிள்ளைகளும் இங்கு பட்டப் படிப்பு வரை திறமையாக கல்வி கற்று நல்ல உயர்ந்த பதவியில் இருக்கின்றார்கள். யேர்மனில் முதியோர்கள் காப்பகத்தில் சேவையாற்றிய அனுபவங்களும் இவரிடம் உள்ளன.

கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்னும் பழமொழிக்கு இணங்க 2009 இங்குள்ள சமூக சேவை அலுவலகம் (InterKult) தங்களுடன் சேர்ந்து பணியாற்றும்படி வேண்டி கொண்டதால் 2 வருடம் அது தொடர்பான கல்வி கற்று சித்தியடைந்தார். இவரது நகர பிதாவின் கையாலே மற்றைய ஊழியர்களுக்கும் இவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற சமூக சேவகி என்ற அங்கீகாரம் பெற்றமையால் சமூக சேவை நிலையத்தில் வெளிநாட்டவர்களுக்கு பல சேவைகளை செய்ய அனுமதிக்கப்பட்டார். இப்பொழுதும் இந்த பணி தொடர்கிறார். இவரது எழுத்துப்பணியின் சிறப்பினால் 8 தடவைகள் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவரது பணிகள் தொடரவும் தமிழ் எழுத்து பணி தொடரவும் வாழ்த்தி நிற்கின்றோம்!...



(21.04.1926 - 08.09.2022)



(14.11.1948) புதிய அரசர் சார்ள்ஸ்

**பிரித்தானியா மகாராணி எலிசபெத் காலமானார்..08.09.2022..**

கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளின் ராணியும் இவர்தான்..
அவரது மகன் சார்ள்ஸ் பிரித்தானியாவின் புதிய அரசர்!..
15 பிரதமர்களை(3பெண்கள் உட்பட) நியமித்து அவர்களோடு பணியாற்றியவர்!..
பிரித்தானியாவை நீண்டகாலம் ஆட்சி செய்த மகாராணி இரண்டாவது எலிசபெத் தனது 96வது வயதில் 08.09.2022 அன்று காலமானார்.
1952ல் மகாராணியின் தந்தை அரசர் ஜோர்ஜ் காலமானதைத் தொடர்ந்து எலிசபெத் அரசியாக முடிசூடினார்.
1952 - 2022 என 70 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து பிரித்தானிய வரலாற்றில் அதிகூடிய காலம் ஆட்சி செய்த பெருமைக்குரிய அரசியாக இருந்துள்ளார்.
தனது 70 ஆண்டுகால ஆட்சியில் 15 பிரதமர்களை உத்தியோகபூவமாக நியமித்து அவர்களோடு பணியாற்றிய சாதனைக்குரியவர்.
இவரின் முழுப்பெயர் எலிசபெத் அலெக்ஸ்சாண்ட்ரா மேரி வின்ட்சர்.
கணவர் கிறீஸ்லாந்து நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட கோமகன் பிலிப். இவர்களது திருமணம் 1947 நவம்பர் 20ல் நடைபெற்றது. பிலிப் 99வது வயதில் 2021ஆம் ஆண்டு காலமானார்.
மகாராணிக்கு 3 மகன் 1 மகள் பிறந்தார்கள். தற்போது 8 பேரப்பிள்ளைகள் 12 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர்.
கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கும் இவர்தான் ராணியாக இருந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.
மகாராணியின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் சார்ள்ஸ் புதிய அரசராகவும் பொதுநலவாய நாடுகளின் தலைவராகவும் செயற்படுவார்.
மகாராணியின் இறுதிச்சடங்குகள் பத்துநாட்களின் பின் அரசமரியாதையுடன் உலகத் தலைவர்களின் அஞ்சலி நிகழ்வோடு 19.09.2022 அன்று பிரித்தானியாவில் நடைபெற்றது.

(தொடர்ச்சி 56ம் பக்கம்)

# இலங்கைச் செய்திகள் சில...

2.7.22-நாட்டில் இடம்பெற்றுவரும் வீதி விபத்துக்களால் வருடாந்தம் 12.000 பேர்வரை இறக்கிறார்கள் எனத் தெரியவந்துள்ளது.
4.7.22-நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரம், மருத்துவ நெருக்கடியால் 15.000 இதய நோயாளிகள் அறுவை சிகிச்சை செய்யமுடியாமல் காத்திருக்கிறார்கள்.
4.7.22-திருக்கேதீஸ்வரத்தில் 28 அடி உயரமான சிவன் சிலையும் நாவலர் சிலையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
6.7.22-இலங்கை வங்கி தனது 61வது நிறைவைக் கொண்டாடியது.
6.7.22-நாட்டில் ஏற்பட்டிருக்கும் பசி, பட்டினி, பஞ்சம் காரணமாக 150 க்கும் அதிகமான தமிழர்கள் தமிழ் நாட்டிற்கு சட்டவீரோதமாகப் படகுகள்மூலம் சென்றுள்ளனர்.
7.7.22-வடகிழக்கில் 95 வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருப்பதாக தேசிய கண்ணிவெடிகள் செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது. இதற்கான செலவு வருடாந்தம் 1கோடி 70 லட்சம். 2028ம் ஆண்டில்தான் முடிவடையும்.
7.7.22-இலங்கை மக்களுக்கு தமிழகப் பொலிசார் 6 கோடி ரூபா பெறுமதியான நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர்.
7.7.22-மாற்றுத்திறனாளிகள் 1000 பேரை உள்ளடக்கி மாபெரும் விளையாட்டுப்போட்டி ஆகஸ்ட் 20, 21ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவிருப்பதாகத் Date Chavity அமைப்பு தெரிவித்துள்ளது.
8.7.22-பொருளாதாரம் எரிபொருள் நெருக்கடியால் தேயிலைத் தொழிலாளர்கள் சுமார் 10 லட்சம்பேர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
8.7.22-கடந்த 6 மாதங்களில் 1.486 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.
8.7.22-கடந்த 2 வருடங்களில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு 44.330 கோடி ரூபா செலவு என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
9.7.22-இலங்கையில் வரலாறு காணத மக்கள் போராட்டம். ஜனாதிபதி கோட்டபாய நாட்டைவிட்டு வெளியேறி சிங்கப்பூரில் இருந்தவாறு தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்தார். இப்போராட்டத்தில்..150 பேர்வரை காயம் 6 ஊடகவியலாளர்கள் தாக்குதல், 5 அமைச்சர்கள் பதவியை ராஜினாமாச் செய்தனர், ஜனாதிபதி மாளிகை பொதுமக்களால் முற்றுகை, ரணில் விக்கிரமசிங்கா வீடு தீ வைத்துக் கொழுத்தப்பட்டது. ஒருவர் இறப்பு, 90 நாட்கள் போராட்டத்தின் உச்ச கட்டம். ரணில் தற்காலிக ஜனாதிபதியாகப் பதவி ஏற்பு. நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனம். ஜனாதிபதி கோட்டா சிங்கப்பூரில் தங்சம். பல உயர் அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேற்றம்.

11.7.22-யாழ் - கிளிநொச்சி புதிய ரயில் சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
13.7.22-2022 தை - ஆனி மாதங்களின் வாகன விபத்துக்களில் 1.459 பேர் மரணம் 3.326 பேர் படுகாயம், 1.387 விபத்துக்கள், 4.309 சிறுவிபத்துக்கள் நடைபெற்றதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.
14.7.22-பொருளாதார நெருக்கடியால் கட்டிடப்பகுதி வேலையாட்கள் சுமார் 15 லட்சம் பேர் வெலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
15.7.22-ஜனாதிபதி கோட்டபாய சிங்கப்பூரில் இருந்துகொண்டு சட்டப்படி தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்தார்.
17.7.22- 39 வருடங்களின் பின் 2ம் முறையாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என சபாநாயகர் அறிவித்தார்.
19.7.22-பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரம சிங்க வெற்றி பெற்று இலங்கையின் 8வது ஜனாதிபதியானார்.
24.7.22-1.1.2022 - 30.6.2022 வரை 6 மாதகாலப்பகுதியில் ஒன்றரை லட்சம் இலங்கையர்கள் வேலை வாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். பெருவாரியானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கே சென்றுள்ளனர்.
25.8.22-காலிமுகத் திடல் "கோட்டா கோ கோம்" போராட்ட நடவடிகஇகைகளால் சுமார் 50 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு நகர அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது.
28.8.22-நாட்டின் பசி பட்டினி பொருளாதார நெருக்கடியால் மேலும் 8 இலங்கைத் தமிழர்கள் கடல்வழியாக தமிழகம் சென்றடைந்தனர். இதுவரை 157 தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.
29.8.22-நாட்டின் பொருளாதாரம் பசி பட்டினி நெருக்கடியால் சுமார் 40 ஆயிரம்பேர் போஷாக்கின்மையால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
30.8.22-வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 2.000 நாளை நிறைவு செய்துள்ளது போராட்டம் தொடர்கின்றது.
31.8.22-கோதுமை மாவு விலை ஏற்றத்தினால் நாட்டில் 3.000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.
2.9.22-கடந்த யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் இலங்கையில் 26 பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என பொலிசார் அறிவிப்பு.
2.9.22-ஐம்பது நாட்களுக்குப்பின்பு முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபகஇஸ நாடு திரும்பியுள்ளார். அரசாங்கம் அவருக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளது.
4.9.22-இவ்வாண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மூன்றுமடங்கு அதிகரிப்பு இவ்வாண்டு 31.8.22வரை 43.399 பேர் அடையாளம் காணப்பட்டனர். சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 4.9.22-சாவதேச நாணய நிதியம் மேலும் 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை இலங்கைக்கு வழங்க முடிவு செய்துள்ளது. உலக உணவுத்திட்டமும் 40 மில்லியன் டொலர்களை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளது.

# உலகச் செய்திகள் சில...

1.7.22-அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றவாசிகள் 46 பேரின் இறந்த உடல்கள் லொறி ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
2.7.22-சிரியாவில் முடிவுறாத உள்நாட்டுப் போரால் 30.6.2022வரை 3 லட்சம் பேர் பலி. பல லட்சக்கணக்கானோர் அகதிகள்.
5.7.22-போரில் அழிவுற்ற உக்கிரைன் நாட்டைச் சீரமைக்க 750 பில்லியன் டொலர் தேவை என அந்நாட்டு தலைவர் அறிவிப்பு.2022 பெப்ரவரியில் ஆரம்பித்த போரால் சுமார் 60 லட்சம்பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். 80 ஆயிரம்பேர் வீடுகளை இழந்துள்ளனர். 346 சிறுவர்கள் பலி. 2018 பாடசாலைகள் சேதம் 215 பாடசாலைகள் அழிந்துள்ளன.
7.7.22-இங்கிலாந்தில் நிதி, சுகாதார அமைச்சர்கள் இராஜினாமா. தற்போதய பிரதமர் ஜோன்சனும் அக்டோபரில் பதவி துறப்பு.
7.7.22-ரஷ்ஷியாவின் எதிர்ப்பை மீறி பின்லாந்து, சுவீடன் நாடுகள் நேட்டோ அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. 30 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
8.7.22 வரை 59 ஐரோப்பிய நாடுகளில் 6.027 பெருக்கு குரங்கு அம்மை தொற்று உறுதி செய்யப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.
-சீனாவின் சனத்தொகை 2040ம் ஆண்டளவில் குறைவடையும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்தியா முன்னிலைக்கு வரும். தற்போது உலக சனத்தொகை 700 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
-சோமாலியா நாடு கடந்த 40 ஆண்டுகள் இல்லாத கடும் வறட்சி பசி பட்டினி சுமார் 43 லட்சம் மக்கள் பெரும் அவலம். கடந்த சில வருடங்களில் மூன்று லட்சம் மக்கள் இதனால் இறந்துள்ளனர்.
-இந்தியா ராஜ்ஜ சபை உறுப்பினராக இசையமைப்பாளர் இளையராஜா நியமனம். இவர் சுமார் 7.000 பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார். 20.000 மேற்பட்ட மேடை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார்.
-யப்பான் முன்னாள் பிரதமர் ஷின் சோ தேர்தல் பிரசாரத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்டார். 67 வயது 2012 - 2020 வரை பிரதமர் பதவி வகித்தவர்.
-இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடுடையோர் 22.43 கோடிபேர், இரத்தச் சோகையாளர்கள் 17.15 கோடிபேர் உடற்பருமனுடையோர் 3.43 கோடிபேர் காணப்படுகிறார்களாம்.
9.7.22- வாழ்க்கைச் செலவு நெருக்கடியால் உலகில் 71 மில்லியன் மக்கள் பாதிப்பு. ஐ.நா. தாபனம் குறிப்பிட்டுள்ளது.
13.7.22-பாக்கிஸ்தானில் கடும் மழை வெள்ளம் 150 பேர்வரை இறப்பு. ஆப்கானிஸ்தானில் பூகம்பம் நூற்றுக்கணக்கானோர் பலியாகினர்.

கடந்த ஆண்டில் உலகளவில் 10 கோடி பேர்வரை தமது நாடுகளைவிட்டு புலம் பெயர்ந்துள்ளனர் என ஐ.நா. அகதிகள் பிரிவு தெரிவித்துள்ளது.

17.7.22-உலக விமான சேவைகளின் தரம், சேவை, பயணிகளின் வசதி, பணியாளர்சேவை, பாதுகாப்பு உள்ளிட்ட தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த நிறுவனங்கள் கட்டார் எயர், நியூசிலாந்து எயர், எதிஹாட் எயர்.

18.7.22-போத்துக்கல், பிரான்ஸ் நாடுகளில் 40 - 50 பாகை வரை கடும் வெப்பம். போத்துக்கலில் 250 பேர்வரை பலியாகியுள்ளனர். பிரான்சில் 15.000 பேர்வரை தமது வீடுகளைவிட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

20.7.2022-சில ஐரோப்பிய நாடுகளில் நீண்ட காலங்களின்பின் 40 - 50 பாகைவரை கடும் வெப்பம் 1.000 பேர்வரை இறப்பு.

21.7.22-இந்திய ஜனாதிபதி தேர்தலில்திரெளபதி முர்மு வெற்றிபெற்று 15வது குடியரசுத் தலைவரானார். இவர் பழங்குடி இனத்துப் பெண்ணாவர். இந்திய வரலாற்றில் 2வது பெண் ஜனாதிபதி என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்

24.8.22-ரஷ்ஷியா-உக்ரைன் மோதலில் இதுவரை 9.000 உக்ரைன் படையினர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

25.8.22-பாக்கிஸ்தானில் வரலாறு காணாத மழைவெள்ளம் 1.200 பேர்வரை இறப்பு 33 மில்லியன் மக்கள் இடம்பெயர்வு. 2.18.000 வீடுகள் அழிவு. 30 லட்சம் குழநஇதைகள் பாதிப்பு. 6.5 லட்சம் கர்ப்பிணித்தாய்மார் பாதிப்பு. சுமார் 50 லட்சம்பேருக்கு தொற்று நோய் அபாயம்.

28.8.22-2021ம் ஆண்டில் இந்தியாவில் 4.22 லட்சம் வீதி விபத்துக்கள் நடைபெற்றதாகவும் 1.73 லட்சம்பேர் உயிரிழப்பு என அரசு அறிவித்துள்ளது.

31.8.22-சோவித் ஒன்றியத்தின் கடைசித்தலைவர் வரலாற்றில் பல அடையாளங்கள் கொண்ட மிகைல் கொபர்ச்சோவ் தனது 91 வது வயதில் காலமானார்.

2.9.22- கடந்த ஆண்டில் இந்தியாவில் 31.677 கற்பழிப்புச் சம்பவங்கள் வழக்குகள் பதிவாகியுள்ளன. ஒரு நாளுக்குச் சராசரியாக 86 சம்பவங்கள் நடைபெற்றதாகத் தெரியவந்துள்ளது.

8.9.22-சூடானில் இரு இனக்குழுக்களிடையே மோதல் சம்பவங்களில் 400 பேர்வரை பலி. 1.1.2022 - 31.08.2022 வரை 224 மோதல் சம்பவங்கள் நடந்துள்ளன.

15.09.2022-உலகில் தற்போது 28 மில்லியன் பேர் கட்டாய வேலைகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். 22 மில்லியன்பேர் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் 50 மில்லியன் பேர் இப்படியான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட 10 மில்லியன் அதிகரித்ததாகவும் ஐ.நா. சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

# தாயக தரிசனம்!......

"பெற்றதாயும் பிறந்தபொன் நாடும் நற்றவானிலும் நனி சிறந்தனவே"என்ற அற்புத வரிகள் எவ்வளவு உன்னதமானது. நம் இலங்கைத் தேசத்தில் எத்தனை அவலங்கள் கொடுமைகள் நடந்து முடிந்தாலும் புலம்பெயர் தேசங்களிலிருந்து எமது நாட்டுக்குப் போவது என்பது எவ்வளவு சுகமானது. இதை அனுபவித்த பலருக்குத் தெரிந்த விடையமே.

"ஒரு எறியில் இரண்டு மாங்காய்" என்பது நம்மவர்களின் கிராமியப் பழமொழியாகும். இப்படியாகத்தான் எனது தாய்நாட்டுப் பயணம் திட்டமிட்டபடி நடைபெற்றது. 27.07.2022 யேர்மனியிலிருந்து புறப்பட்டு 28.7.2022 அன்று தாய் மண்ணில் கால் பதித்தபோது ஒரு இன்ப சுகம்தான். நான்கு வருடங்களுக்குப்பின் தாயம் சென்றது இன்னும் மகிழ்ச்சியைத் தந்தது.

நம்மில் அநேகமானவர்கள் வெளிநாட்டிலிருந்து கொழும்பு விமான நிலையத்தில் இறங்கி வான், பஸ் என ஏறி உடனடியாகவே வடமாகாணம் அல்லது கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தமது சொந்த ஊருக்குப் பறந்துவிடுவார்கள். ஆனால் எனது பயணம் அப்படியல்ல அரைப்பங்கு பொதுவேலை மிகுதி அரைப்பங்கு சொந்த வேலை என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடியால் மலையகம் இரத்தினபுரி நோக்கி எனது பயணம் ஆரம்பம்.

எமது சஞ்சிகையூடாக ஏற்கனவே பல ஆண்டுகளாகப் பல லட்சங்கள் உதவி செய்த நிறுவனமான இரத்தினபுரி தமிழர் ஐக்கிய சிந்தனை அமைப்பின் தலைவர் திரு க.சிவராஜ்வளவன் அவர்கள் என்னை அழைத்துச் செல்ல விமான நிலையம் வந்திருந்தார். முன்னர் பல தடவைகள் தொலைபேசியில் கதைத்தாலும் இதுவே முதற்தடவை நேரடிச்சந்திப்பு. பஸ் வண்டியில் இருவரும் புறப்பட்டு இரத்தினபுரிக்குப் போய் சேர சுமார் மூன்றுமணி நேரம். இந்த நேரப்பொழுதுகள் எத்தனையோ சுவார்சியமான கதைகள், நம் இருவரின் பணிகள்பற்றிய கதைகள், குடும்பக்கதைகள் என பரந்துபட்ட கதைகளால் இந்த மூன்றுமணி நேரமும் ஓடியதே தெரியவில்லை.

சிவராஜ்வளவன் வீடு..அழகான மனைவி அழகான மூன்று செல்வங்கள். அவர்களின் பேச்சு, வரவேற்பு, விருந்தோம்பல் எனது பயணக்களைப்பை இல்லாமல் ஆக்கியது. அவர்கள் வீட்டுக்கு அருகில்தான் இரத்தினபுரி தமிழ் மகாவித்தியாலயம் அமைந்துள்ளது. அவர்களின் பிள்ளைகளோடு நானும் அந்தப்பாடசாலைக்குச் சென்றேன். அவரின் பிள்ளைகள் அதிபருக்கும் ஆசிரியருக்கும் என்னை அறிமுகப்படுத்த, அங்கு என்பணிகளை அறிந்த ஆசிரியர் ஒருவரும் மேலும் பல விடையங்களை எடுத்துக்கூறினார். இவைகளைக் கேட்ட அதிபரும் சில ஆசிரியர்களும் என்னை அன்போடு

வரவேற்று அதிபர் அறைக்கு அழைத்துச் சென்று பல விடையங்களையும் எடுத்துக்கூறினர். பாடசாலையின் சகல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று பார்வையிட வைத்து, தேவைகளையும் நிலைமைகளையும் கூறினர். பின்னர் உயர்வகுப்புக்கு அழைத்துச் சென்று மாணவர்களோடு ஒரு கலந்தரையாடலை திடீரென ஒழுங்கு படுத்தினர். உயர்வகுப்பு மாணவர்களுடனம் நான் வந்த நோக்கம் பற்றியும் எனது செயற்பாடுகள் பற்றியும் நாட்டு நிலைமைகள், வெளிநாட்டில் தமிழர் வாழ்வு பற்றியும் ஒரு நல்ல கலந்துரையாடல் சிறப்பாக அமைந்தது.

நான் சென்ற நோக்கம்..மலைய தோட்ட மக்களின் உதவி...என்னோடு இளம் ஆசிரியர்கள் மூவர்..ஏற்கனவே எமது சஞ்சிகையின் வாசகர்களின் நிதி உதவியாக ஒன்றரை லட்சம் ரூபா அனுப்பிவிட்டுத்தான் நான் சென்றிருந்தேன். அப்பணத்திற்கு உணவுப் பொதிகள் கட்டப்பட்டுத் தயார் நிலையில் இருந்தன. அவற்றுடன் மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் இன்னொரு பகுதியாக இருந்தன. எல்லாவற்றையும் ஒரு ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு சுமார் 5 - 6 கிலோமீட்டர் தூரம்வரை பயணித்தோம்.

ஒற்றையடிப் பாதை, கற்கள், கிடங்கும் பள்ளமும், ஏற்றம் இறக்கம் மிகவும் கஸ்டப்பட்டு அந்த மலையக மக்களின் குடியிருப்புக்களைச் (லயன்கள்) சென்றடைந்து நாம் கொண்டு சென்ற பொதிகள் அனைத்தையும் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று கையளித்தோம் வறுமையின் உச்சம், வீடுகள் இல்லை, உழைப்பு இல்லை, கல்வி, பொருளாதாரம், சுகாதாரம்,அரசியல் எல்லாம் பூச்சியமாகத்தான காணப்படுகின்றன.











அரசியல் வாதிகளும் தேர்தல்காலங்களில் வாக்குறுதி மட்டும். தேர்தல் முடிய அனைத்தும் காற்றோடு பறந்து விடும் இதுதான் மலையக நிலைமை. அந்த மக்களோடு கலந்துரையாடியபோது பல தாங்கமுடியாத கண்ணீர் கதைகளை சொன்னார்கள். இன்றும் இலங்கைநாட்டில் ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகமாகத்தான் மலையகப் பகுதிகள் காணப்படுவது வருந்தத்தக்க விடையமே.

இப்படியாக மூன்று நாட்கள் மிகக்கவலையோடு பாமர மக்களுக்கு உதவி மகிழ்வுடன் அவர்களைச் நேரடியாகச் சந்தித்து உரையாடிய பொழுகள் மறக்க முடியவில்லை. பல பொதுச் சேவையாளர்கள், நண்பர்களுடன் உரையாடல் விருந்தோம்பல் எனத் தொடர்ந்ததுடன் அவகளின் காரியாலயம்துக்கும் சென்று பார்வையிட்டேன். அவர்கள் எதிர்கொள்ளும் பல நெருக்கடிகளைக் கேட்டறிந்தேன். மகிழ்வு ஒரு புறம் கவலை ஒருபுறம் அந்த மக்களின் நிலைகண்டு பல ஆறுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்கினேன். மனவேதனையுடன் பஸ் வண்டியில் புறப்பட்டு அடுத்தநாள் யாழ்ப்பாணம் நாவற்குழியான எனது ஊருக்குப் பல சிரமங்களைத் தாண்டிச் சென்றடைந்தேன்.

1965ம் ஆண்டு அரசால் வழங்கப்பட்ட காணி பெற்று எனது சகோதரர் மற்றும் எனது தந்தை மல்லாவியிலும் ஒட்டன்குளம் என்ற இடத்திலும் வாழ ஆரம்பித்து விவசாயம் செய்தனர். எனது வதிவிடமும் 1970 ஆரம்பித்து 1983வரை அங்கேயே வாழ்ந்தேன். அந்தப் பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆதலால் அப்பகுதி மக்களில் தொழில், பொருளாதாரம், வறுமை, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து அரசியல் அனைத்தும் நன்கு தெரிந்துகொண்டேன். 1973 - 1983 வரை துணுக்காய்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலத்தில் பல பதவிகளை வகித்து இறுதியாகக் கணக்காளராகக் கடமையாற்றிவிட்டுத்தான் நாட்டு நிலைமை உயிராபத்து நிலவ நானும் அகதியாக யேர்மனிக்கு 1983ல் வந்து சேர்ந்தேன்.

30.07.2022 - 01.08.2022 நான் வாழ்ந்த, தொழில் செய்த பிரதேசமான வன்னியின் மல்லாவி- துணுக்காய் - பாண்டியன்குளம் பிரதேசங்களுக்கான பயணம். தொடரூந்து, பேரூந்து எனப் பயணமாகி மாங்குளத்தில் வந்து இறங்கினேன். முன்னர் நான் வாழ்ந்த காலத்து மாங்குளம் அல்ல. அனைத்தும் வேறுபட்டிருந்தது. என்னை அழைத்துச் செல்ல வந்திருந்த துணுக்காய் ஒளிரும் இல்ல முகாமையாளரோடு அளவளாவிவிட்டு. மாங்குளத்தில் அமைந்துள்ள "நல்லாயன் சிறுவர் இல்லம்" நோக்கி எமது பயணம் ஆரம்பம். (இந்த இல்லத்தில் வாழும் பிள்ளைகளுக்கும் கடந்த மூன்று வருடங்களாக எமது சஞ்சிகையின் வாசகர்கள் பெரும் உதவிகளைச் செய்து வருகிறார்கள்.)

இல்ல நிர்வாகி அருட்சகோதரி றொபினா அவர்களையும் பிள்ளைகளையும் கண்டு கலந்துரையாடி அவர்கள் அளித்த தேநீர் விருந்திலும் கலந்துகொண்டேன். இல்லப் பிள்ளைகளுடன் கலந்துரையாடியது பெரும் மகிழ்வாக அமைந்தது. அவர்களின் வாழ்விடம், சுற்றாடல் மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் காணப்பட்டது கண்டு அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தேன். வெளிநாடுகள் போல நல்ல நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருந்தமை அவர்களின் இருப்பிடம் சிறப்பு. மகிழ்வு..





மல்லாவி-துணுக்காயில் இயங்கும் "ஒளிரும் இல்லம்" (கூடுதலாக மாற்றுத்திறனாளிகளால் இயக்கப்படும் நிலையம்) இந்த அமைப்பினருடன் 2015ம் ஆண்டு தொடக்கம் எமது சஞ்சிகை தொடர்பில் இருந்து வருகின்றது. எமது வாசகர்களின் பெருமுயற்சியால் பல லட்சம் நிதி உதவிகளை வழங்கி இருக்கின்றோம். தொடர்ந்து நிதி உதவிகளைச் செய்து வருகின்றோம். இந்த அமைப்பினரின் செயற்பாடுகளை நேரடியாகக் கண்டறியவேண்டும் என்னும் நோக்கில் எனது பயணம் ஆரம்பமாகியது.

இந்த இல்லத்தினரால் நிர்வகிக்கப்படும். வியாபாரகடை, அரைக்கும் ஆலை, உணவுப்பொருட்கள் பொதியிடும்தளம், விவாசப் பண்ணை, அவர்களின் காரியாலயம் எனப்பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார்கள். இங்கு பல மாற்றுத்திறனாளிகளும் கடமையாற்றுவது கண்டு அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தேன். துணுக்காய் பிரதேசம் மட்டுமல்லாது பாண்டியன்குளம் பிரதேசத்துக்கும் பல போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியில் என்னை அழைத்துச்சென்று நேரடியாகக் காண்பித்தனர். பல மாற்றுத்திறனாளிகள் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று உணவுப்பொதிகளை வழங்கினோம். இதன் நிர்வாக ஒழுங்குகளை அதன் தலைவர் திரு சுதாகரன் அவர்கள் மேற்கொண்டார்.

மல்லாவி, துணுக்காய், கல்விளான், பாண்டியன்குளம் பகுதிகளுக்குச் சென்று பல இடங்களைப் பார்த்ததுடன் துணுக்காய் பகுதி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத் தலைவர், பொதுமுகாமையாளர் பணியாளர்களோடும் துணுக்காய் பிரதேசசபைத்தலைவரும் பாலிய நண்பருமான திரு அமிர்தலிங்கத்துடனும் கலந்துரையாடி மகிழ்ந்தேன். என்னோடு அன்று அதாவது 35 வருடங்களுக்கு முன்னர் கடமையாற்றிய பெண்மணி றஞ்சி அவரது கணவன் யோகன் (அரச பதிவாளர்) ஆகியோரைச் சந்தித்து உரையாடியதும் பெரு மகிழ்வாக அமைந்தது. இடம் காணாதபடியால் இக்கட்டுரையைச் சுருக்கமா முடிக்கின்றேன். (கட்டுரையும் படங்களும் அடுத்த இதழில் தொடரும்)





# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00

05. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00

06. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

07 திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 150-00

09 செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-07-2022 (மேலதிகச் செலவு) - 119-50

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

+ 480-00

.......................

அன்பளிப்புகள்... + 360-50

07-26.1.2022 திரு ப.சௌந்தரராசா - Duisburg + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு-21.094-63)

08-04.02.2022 திருமதி இந்திரா மகாலிங்கம்- Werne + 120-00
(தந்தையாரின் நினைவுநாள் அன்பளிப்பு-25.890-05)

09-30.4.2022 திருசரவணமுத்து ஜனாத்தனன் - London + 140-00
(பிறந்தநாள் அன்பளிப்பு-50.000-00)

10-21.05.2022 திருமதி சிவதர்சினி பிராங்ளின்- Duisburg + 113-12
(பிறந்தநாள் அன்பளிப்பு-40.000-00)

11-20.7.2022 திருச்செல்வம் ரவிக்குமா - Norway + 420-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு 1.50.000-00)

12-25.8.2022 திரு பரமானந்தம் பிரபாகரன் - Oberhausen + 200-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு 68.927-20)

13-12.08.2022 திரு ப.பன்னீர்ச்செல்வன் - London + 140-00
(பிறந்தநாள் அன்பளிப்பு 50.000-00)

14-திருமதி கலா மகேந்திரம் - Oberhausen + 150-00

15-திருமதி றஞ்சனா தவராஜ் - Wadgassen + 150-00 + 1 533-12

---------------------------------

+ 1533-12 + 1893-62

| | | | |
|---|---|---|---|
| முற்பக்கம் | | | + 1893-62 |
| 16-திருமதி டொறின் மகாலிங்கம் - Oberhasen | + 100-00 | | |
| 17-திரு சின்னையா வேலும்மயிலும் -München | + 100-00 | | |
| 18-திரு பத்மன் பசுபதிராசா - Wuppertal | + 100-00 | | |
| 18-திருமதி கொன்ஸி குடும்பம் - Canada | + 100-00 | | |
| 19-திரு எஸ் விக்னேஸ்வரன் - Essen | + 50-00 | | |
| 20-திரு எஸ் சிவஞானம் - London | + 50-00 | | |
| 21-திரு சி ஏகானந்தராசா - Weeze | + 50-00 | | |
| 22-திருமதி பிங்கலை செந்திலன் - Nürenberg | + 50-00 | | |
| 23-திரு வைரமுத்து சிவராசா - Duisburg | + 234-43 | | |
| | | | ................. |
| | 834-43 | | + 834-43 |
| | | | ................. |
| | | | + 2.728-05 |
| அனுப்பியது:- | | | |
| A-ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் திருநெல்வேலி- 140-00 | | | |
| ஏப்ரல் 2022 (ரூபா 50.000-00) | | | |
| B-"நல்லாயன்" சிறுவர் சிறுவர் இல்லம் - மாங்குளம் - 144-43 | | | |
| 26.07.2022 (ரூபா 50.000-00) | | | |
| C-ஒளிரும் "வாழ்வகம் மல்லாவி - துணுக்காய் | | | |
| 26.01.2022 - (21.094-63 ரூபா) | - 100-00 | | |
| 04.02.2022 - (25.590-05 ரூபா) | - 120-00 | | |
| 21.05.2022 - (40.000-00 ரூபா) | - 113-12 | | |
| 20.07.2022 - (1.50.000-00 ரூபா) | - 420-00 | | |
| 26.07.2022 - (1.00.000-00 ரூபா) | - 281-36 | | |
| 25.08.2022 - (68.927-20 ரூபா) | - 200-00 | | |
| 03.09.2022 - (35.000-00 ரூபா) | - 100-00 | - 1.334-48 | |
| D-ஐக்கிய சமூக உதவும் அமைப்பு - இரத்தினபுரி | | | |
| 26.07.2022 - (1.50.000-00 ரூபா) | - 418-29 | | |
| 01.08.2022 - (50.000-00 ரூபா) | - 140-00 | | |
| 12.08.2022 - (50.000-00 ரூபா) | - 140-00 | - 698-29 | |
| E-திருஞானசம்பந்தர் குருகுலம்-மட்டக்களப்பு | | - 480-00 | |
| | | - 2.797-20 | |
| மண் கணக்கு வங்கி வரி 01.07.2022 -31.07.2022 | | - 23-96 | |
| 01.08.2022 -31.08.2022 | | - 13-69.......... | - 2.834-85 |
| | | | ----------------- |
| 31.08.2022 மீதி (மேலதிகச் செலவு) | | | - 106-70 |

19.07.22 Email

Sebamalai Mariannai House of Compassion
Thullukudiyiruppu - Mannar
Pesalai- Sri Lanka


19.07.2022

மண் இலக்கிய சஞ்சிகை ஜேர்மன்

அன்பிற்கும் பாசத்திற்குரிய ஜேர்மன் உறவுகளே!

ஒவ்வொரு வருடமும் எங்களுடைய இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்கு நன்கொடையாக பண உதவி செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இந்த வருடமும் எங்களுடைய பிள்ளைகளின் எதிர்கால நலன்களை கருதி 480 EURO பணத்தினை நன்கொடையாக வழங்கிய உங்கள் அனைவருக்கும் எமது இல்லத்திலுள்ள பிள்ளைகள் சார்பாக நன்றியை தெரிவித்துகொள்ளுகின்றோம்.

தாழ்மையுள்ள
அருட்சகோதரி மேரி ஜோசப்



ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்
Olirumvaalvu Organizaions - Thunukkai
Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com

T.P:021 206 0620
Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

பற்றுச் சீட்டை

திகதி: 31 / 08 / 2022

பெயர்:- [illegible] தொ.இல

முகவரி:- [illegible]

விபரம்:- [illegible]

தொகை எழுத்தில்:- [illegible] மட்டும் பெற்றுக்கொண்டேன்.

1741

ரூபா 35,000/=

பணம் வழங்கியவர் ஒப்பம்

பொருளாளர் ஒளிரும் வாழ்வு அமைப்பு துணுக்காய்

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 | Farm No:-0213204790 | Mobile:-0774868085
Fax:-0774868085 | Viber:-0774868085

Re.No.- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி 31 [illegible]

திரு வை . சிவராசா

மண் கலை இலக்கிய சஞ்சிகை

ஜேர்மனி

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள்,நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்கள் சமூக நலன்நோக்கிய நற்சிந்தனையுடன் தங்களால் ஒழுங்கமைத்து நிதி அனுசரணை நல்கிய திருமதி பரமானந்தம் பூமணி அவர்களின் 31வது நாள் நினைவினை நினைவுகூரும் வண்ணம் வழங்கிய 68927 .00ரூபா நிதியினை பயன்படுத்தி மகிழ்வு இல்லம் பிள்ளைகளிற்கும்,தேறாங்கண்டல் முதியோர் இல்லம் முதியோர்களிற்கும் மதிய உணவு வழங்கியதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு நிவாரண பொதிகளும் வழங்கினோம் என்பதை தங்களிற்கு நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் திருமதி பரமானந்தம் பூமணி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
**Olirumvaalvu Organization - Thunukkai**

T.P:- 0212060620 Farm No:-0212204790 Mobile:-0774868085
Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 Fax:-0774868085 Viber:-0774868085
திகதி [illegible] / 07 / 2022

வை.சிவராசா

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஜேர்மனி

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள்,நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்கள் சமூக நலன்நோக்கிய நற்சிந்தனையுடன் தங்களால் ஏற்பாடு செய்து வழங்கிய 35,000.00ரூபா நிதியினை பயன்படுத்தி மகிழ்வு இல்லம் பிள்ளைகளிற்கும்,தேராங்கண்டல் முதியோர் இல்லம் முதியோர்களிற்கும் மதிய உணவு வழங்கினோம் என்பதை தங்களிற்கு நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறோம் . அத்துடன் தங்களது தொடர்ச்சியான பணிக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

[illegible]
செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

---

**ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்**
Olirumvaalvu Organizaions - Thunukkai
Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com

T.P:021 206 0620
Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

பற்றுச் சீட்டை

திகதி 27/ 07 /2022

பெயர்:- [illegible] தொ.இல

முகவரி:- ஜேர்மனி.

விபரம்:- [illegible]

தொகை எழுத்தில்:- ஒரு இலட்சம் ரூபா மட்டும். மட்டும் பெற்றுக்கொண்டேன்.

ரூபா 100,000/-

பணம் வழங்கியவர் ஒப்பம்

1715 [illegible]
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

UNITED MIND
Association for Sustainable Community Development
(Non-profit organisation)

Date: 14/09/2022

ப.பன்னீர்ச்செல்வன்(லண்டன்) அவர்களுக்கும்,
வை.சிவராசா - பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும்,
இதழின் வாசகர் பெருமக்களுக்கும்.

**<u>நன்றிநவிழ்தல்</u>**

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"**

**பொருள்:** பயன்கருதாதவர் செய்த உதவியின் நன்மையினை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலையும் விட அளவினால் மிகப் பெரியதாகும். என்பது வள்ளுவன் வாக்கு

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மலையக தமிழ் மக்களுக்கு, யேர்மனி **"மண்"** கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை ஊடாக **லண்டன் ப.பன்னீர்ச்செல்வன்அவர்கள்** வழங்கிய கொடையளிப்பானது ஏறத்தாள **15** குடும்பங்களுக்கு உதவி இருப்பதை குறித்து பெருமைக் கொள்கின்றோம். நீங்கள் செய்திருக்கும் இக்கைங்கரியமானது காலத்தின் தேவைக்கேற்ற பெரும்புண்ணியமாகும்.


எவ்விதமான பிரதி உபகாரணமும் எதிர்பாராமல் இவர்கள் செய்த உதவி கடலினும் பெரிதாகும். **50,000.00** ரூபா பெறுமதியான இந்த பணியானது உண்மையில் வறுமை காரணமாக குடும்ப சுமையுடன் இருந்த பலருக்கு உதவி இருக்கிறது என்பதில் எச்சந்தேகமுமில்லை.
உதவிக்கரம் நீட்டிய எம் உறவுகளை ஒரு போதும் மறவோம். எம்மக்கள் சார்பாக லண்டன் **ப.பன்னீர்ச்செல்வன்** அவர்களுக்கும், **"மண்"** கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும், இதழின் வாசகர் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"**

**நன்றிகள்**

இவண்
க.சிவராஜ்வளவன்
தலைவர்

+94 45 449 4514, +94 766 161 522 | unitedmind.lk@gmail.com
No.72, Reservoir Road, Ratnapura, Sri Lanka.


பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் &
யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆதரவில்
டோட்முண்ட் தமிழர் அரங்கில்
வரலாற்றுச் சிறப்புமிக்க
"படைப்பாளர்கள்"
நூல் வெளியீட்டு விழா
படைப்பாளர்கள்
காலம்: சனிக்கிழமை 24.09.2022
நேரம்: 16.00 மணி
இடம்: தமிழர் அரங்கு
Rheinische Str 76-80,
44137 Dortmund
தொடர்புகட்கு
சு.பாக்கியநாதன் 0176 55074324
பி. எஸ்.இராஜகருணா 0176 31740702
கலைவிளக்கு






யேர்மனி-ஒபகௌசன் நகரில் வாழ்பவரான திரு ப.பிரபாகரன் அவர்களின் தாயாரின் ஓராண்டு நினைவாக அவரின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு மாவட்டம் - துணுக்காய் பிரதேசத்தில் அமைந்திருக்கும் ஒளிரும் இல்லத்தின் முதியோருக்கு மதிய உணவும் உலர்உணவுப் பொதிகளும் வழங்கல் 30.08.2022. அனுசரணை மண் சஞ்சிகை - யேர்மனி






முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் ஒளிரும் இல்லத்திற்கு மண் சஞ்சிகையின் ஆசிரியர் 2022 ஆவணி மாதம் 1, 2, 3ம் திகதிகளில் நேரடி விஜயம்...

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 215




| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |